# உங்கள் சத்துருவை
# அறிந்து கொள்ளுங்கள்

(ஜெயித்து வாழ, வாலிபர்களுக்கு ஓர் வழிகாட்டி)

சகரியா பூணன்

"கெர்ச்சிக்கும் சிங்கம் போன்ற. . . சாத்தானால் மோசம்போகிட அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே!"

(1பேதுரு.5:8, 2கொரிந்தியர்.2:11)

*ஒன்பதாம் பதிப்பு (2018)

# *ஜெயித்து வாழ . . .*

1. சாத்தானை ஏன் அறிந்துகொள்ள வேண்டும்? – 5

2. சாத்தானின் தோற்றம் – 10

3. சாத்தானின் வஞ்சகம் – 17

4. சாத்தானை தேவன் ஏன் அழிக்கவில்லை? – 26

5. சாத்தானின் வலைவீச்சுகள் – 36

6. சாத்தானின் தோல்வி – 46

**உங்கள் சத்துருவை அறிந்துகொள்ளுங்கள் –** Know Your Enemy (1994)

Copyright - ZAC POONEN

*இந்த புத்தகம் பதிப்புரிமை பெற்றுள்ளது. இந்த பணியின் எந்த பகுதியும் மறுபதிப்போ அல்லது எந்த ரூபத்திலும் கடத்தல் கூடாது. அதாவது, பதிப்பாளர் எழுதித்தந்த அனுமதி இல்லாமல் மின்னனு சாசனமோ அல்லது எந்திர சாசனமோ (ஜெராக்ஸ் உட்பட) பதிவு செய்தல் கூடாது.*

**மேலும் விபரங்களுக்கு**

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149, Karnataka, India
email: cfc@cfcindia.com

மாயலோக பாவங்கள். . .
கெர்ச்சிக்கும் சிங்கமாகிய
சாத்தானின் தந்திரங்கள்
என்பதை வாலிபர்கள்
அறியவேண்டும்!

வாலிபம் சீரழிந்து
கொடும் சிங்கத்திற்கு
இரையாகிடாமல்,
சிருஷ்டிகரை அண்டி,
சாத்தானை வென்று,
பேரின்ப தெய்வ வாழ்வை,
வாலிபர்களாகிய நீங்கள் ....
கண்டடைய வேண்டும்!!

# 1

## சாத்தானை ஏன் அறிந்துகொள்ள வேண்டும்?

*இளம் வாலிபர்களே! உங்களில் அநேகர் இதுவரை அறிந்திராத சில முக்கியமான தேவ வசனங்களை நான் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன். இவ்வசனங்கள் நம் ஆத்துமாவின் எதிரியைப் பற்றியதாகும். இரட்சிப்பைக் குறித்தும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக செய்து முடித்தவைகளைக் குறித்தும் நீங்கள் ஏராளமாய் கேட்டிருப்பீர்கள். ஆனால் நீங்கள் அதிகம் கேள்விப்பட்டிராத ஒன்று உண்டு! அது, சாத்தானைப் பற்றியதே ஆகும்!! இதற்கு காரணம் யாதெனில், அநேகம் பிரசங்கிகள் சாத்தானைப் பற்றி பிரசங்கிப்பதற்கு 'ஏனோ' ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்பதேயாகும்.*

*இவ்வேளையில் சாத்தானைக் குறித்தே உங்களுக்கு நான் எழுத விரும்புகிறேன். அவ்வாறாகவே, 1 பேதுரு 5:8 -ம் வசனத்தில், "தெளிந்த புத்தி உள்ளவர்களாய் விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியான பிசாசானவன்* **கெர்ச்சிக்கிற சிங்கம்போல்** *எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகிறான்" என கூறியிருப்பதைக் காண்கிறோம்.*



*போர்களத்துக் கோட்பாடுகளில் மிக முக்கிய மானதோர் சரத்து யாதெனில்:* **"உங்கள் சத்துருவை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்"** *என்பதேயாகும். போர்களத்தில் யுத்தம் செய்து கொண்டிருக்கும்*

உங்களுக்கு, உங்கள் சத்துருவைப் பற்றி ஏராளமான தகவல் கிடைத்தால், அது உங்கள் யுத்தத்தின் கடுமையை மிக எளிதாக்கிவிடும். இதற்கு மாறாக, உங்கள் சத்துருவைப் பற்றி நீங்கள் 'மிக கொஞ்சமே' அறிந்திருந்தால், நிச்சயமாய் யுத்தம் மிகக் கடினமாய் இருக்கும்! இப்போர்க்களத்துக் கோட்பாடு, அப்படியே நம் கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் பொருந்துவதாய் இருக்கிறது. நீங்கள் மாத்திரம் உங்கள் சத்துருவை அறிந்து கொண்டால், ஒவ்வொரு சோதனைகளிலும் நீங்கள் முற்றிலும் ஜெயம் பெற்று விளங்குவீர்கள் என்பதில் சிறிதும் ஐயமே இல்லை!

இன்று அநேக கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கு, தங்கள் ஜீவிய காலமெல்லாம் போராடினாலும் தோல்வியே அடைகிறார்கள். இதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று "இவர்கள் **தங்கள் சத்துருவைப் பற்றி எதுவுமே அறியாமல்** இருந்ததுதான்!"

மருத்துவக்கல்வி முக்கியமானது என நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். இம்மருத்துவக்கல்வி லட்சக்கணக்கான ஜனங்களை சுகப்படுத்துவதையும், காலத்திற்கு முன்பாக மரிப்ப திலிருந்து காப்பதையும் நம்முடைய சந்ததியிலே நாம் கண்டிருக்கிறோம். இது எவ்வாறு சாத்தியமாயிருக்கிறது? ஆம், மானிட உடற்கூறு அமைப்பிற்கு விரோதமானவைகளைக் குறித்தும், அவைகள் சரீரத்தைத் தாக்கும் வழிமுறைகளைக் குறித்தும் மருத்துவ விஞ்ஞானிகள் ஆராய்ந்து கற்றுக் கொண்டதாலேயே இவ்வாறு சாத்தியமாகிறது. இவ்வாறு சுகாதாரத்திற்கு விரோதியாகிய பாக்டீரியாக்களைப் பற்றியும், தொற்று நோய் கிருமிகளைப் பற்றியும் கருத்தாய் ஆராய்ந்து கற்றுக்கொண்டதாலேயே இன்று மனுஷனுடைய ஆரோக்கியம் மேம்பட்டு விளங்குகிறது!

***இந்த ஆராய்ச்சிகளின் பலனாய், விஞ்ஞானிகள் கண்டுபிடித்த மருந்துகள் நம் ஆரோக்கியத்திற்கு எதிரான விரோதிகளைக் (கிருமிகளைக்) கொன்று அவைகளை நம் மானிட சரீரத்திலிருந்து அப்புறப்படுத்துவதாய் இருக்கிறது.***

இவ்வாறு நம் சரீரத்திற்கு சம்பவிப்பவைகள் எவ்வளவு உண்மையோ, அதைவிட நம் **உள்ளான ஆவிக்கு** நிகழ்வதும் அதிக உண்மையாய் இருக்கிறது! ஆகவேதான், நம்முடைய ஆவிக்கு விரோதியான சாத்தானைக் குறித்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அப்பொழுதான் நாம் அவனை நம்முடைய ஆவியிலிருந்து களைந்தெறிந்து, நம் ஆவியை தேவனுக்கென தூய்மையாய் காத்துக்கொள்ள முடியும்!

சாத்தானைக் குறித்து வேதாகமம் நிறைய காரியங்களைக் கூறுகிறது. சொல்லப்போனால், ஆதாம் ஏவாளை சிருஷ்டித்த செய்தியை

வேதாகமம் கூறியவுடன், உடனடியாக சாத்தானைக் குறித்தே அடுத்த செய்தியாக கூறுகிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் என்ன செய்தார்கள் என்றுகூட வேதம் எதுவுமே கூறவில்லை. ஆனால், ஏதேன் தோட்டத்தில் சாத்தான் பிரவேசித்து எவ்வாறு பாவத்தையும், குழப்பதையும் ஏற்படுத்தி **ஆதாமையும் ஏவாளையும் தேவனிடமிருந்து பிரித்தான்** என்ற நிகழ்ச்சி நமக்குத் தெளிவாகவே கூறப்பட்டுள்ளது!

இன்று உலகத்தில் காணப்படும் எல்லாப் பாவங்களுக்கும், கொடூரத்திற்கும், தீமைக்கும் உள்ள **காரணத்தை** ஏதேன் தோட்டத்தில் சாத்தான் பிரவேசித்த நிகழ்ச்சியில் நாம் காணமுடிகிறது (ஆதி.3).

ஆதிமனுஷனும், மனுஷியும் சிருஷ்டிக்கப்பட்ட சம்பவத்திற்குப் பின் 'உடனடி' அடுத்த செய்தியாக சாத்தானைக் குறித்து ஏன் வேதாகமம் சிரத்தையுடன் நமக்கு கூறவேண்டும்? ஏனென்றால், நாம் சாத்தானைக் குறித்து அறிந்து கொண்டு **விழிப்புடன் ஜீவிக்க வேண்டுமென** தேவன் விரும்புவதாலேயே ஆகும். **கெர்ச்சிக்கிற சிங்கம் போல் யாரை விழுங்கலாம்** என சாத்தான் சுற்றித் திரிகிறான் என நாம் முதலில் கண்டோம். "ஒரு சிங்கம் மிருகக் காட்சி சாலையிலிருந்து தப்பிச் சென்று உங்கள் நகரத்தின் வீதிகளில் சுற்றித்திரிகிறது" என நியூஸ் பேப்பரில் செய்தி வெளியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இச்சமயத்தில் அந்த சிங்கம் உங்கள் நகரத்தில் குறிப்பாக "எந்தப் பகுதியில்" இருக்கிறது என்பதை நீங்கள் அறிய முடியுமென்றால், அந்தப் பகுதியிலிருந்து உங்களை விலக்கிப் பாதுகாத்துக் கொள்ள மிகுந்த உதவியாய் இருக்குமல்லவா? ஆம், நிச்சயம் உதவியாய் இருக்கும்! இதைப்போலவே, நம் வாழ்வின் எந்தெந்தப் பகுதியிலெல்லாம் சாத்தான் தீவிரமாய் செயல்படுகிறான் என்பதை நீங்கள் அறிய முடியுமென்றால், எத்தனையோ பிரச்சனைகளிலிருந்து நீங்கள் காக்கப்பட முடியுமே!

***இன்று அநேக விசுவாசிகள் அடிக்கடி சோர்ந்து போகிறார்கள்! இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை யாதெனில்," சோர்வு அல்லது மனதைரியத்தை இழத்தல் தேவனிடமிருந்து வருவதில்லை". ஆம், பிசாசிடமிருந்தே சோர்வு வருகிறது!***

இதைப் போலவே சண்டை, பயங்கரவாதம், பகை, பொறாமை, கசப்பு, தீமை பேசுதல், குறை சொல்லுதல், முறுமுறுத்தல், ஆளுகைக்கு எதிரான முரட்டாட்டம்.... இதுபோன்ற எல்லா தீமைகளும் **சாத்தானிடமிருந்தே** உற்பவிக்கிறது. ஆகவேதான், நம்முடைய சத்துருவாகிய சாத்தானைப் பற்றி அறிந்து கொள்வது நமக்கு மிகவும் நல்லது.... அப்பொழுதுதான், நம் ஜீவியத்தில் இவ்வித தீமைகளை நாம் மேற்கொண்டு ஜெயித்திட முடியும்!

புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலேயும், நாம் சாத்தானைப் பற்றி வாசிக்கிறோம். இயேசு ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற செய்தியை அடுத்து, **உடனடியாக**

இயேசுவை வனாந்தரத்தில் சாத்தான் சோதித்த நிகழ்ச்சியையே வாசிக்கிறோம்.

இயேசுவை சாத்தான் சோதித்த விபரங்கள் நமக்கு ஏன் தரப்பட வேண்டும்? ஆம், சாத்தானுடைய தந்திரங்களைக் குறித்தும், நம் ஆத்தும எதிரியினுடைய வலிமையைக் குறித்தும் நாம் **அறியாமையில் இருக்கக்கூடாது** என்பதற்காகவேயாகும்.

குறிப்பாக, வாலிபர்களாகிய நீங்கள் சாத்தானைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும். சாத்தானைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதை அறிந்து கொண்டால், நீங்கள் கவனமாய் இருக்க முடியுமே!

***அவனை அறிந்து கொண்டால், இன்று அநேக ஜனங்கள் சாத்தானுக்கு பயந்து நடுங்குவது போல் நீங்கள் அவனுக்கு பயப்படவும் தேவையில்லையே!***

வேதம் சாத்தானைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதை அறியாதபடியினாலேயே இன்று அநேக ஜனங்கள் சாத்தானுக்கு அஞ்சுகிறார்கள். ஆம், "கல்வாரி சிலுவையில் ஆண்டவராகிய இயேசு வினால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டுவிட்டான்" என்ற உண்மையை இவர்கள் அறியாதபடியால், செய்வினை மற்றும் பில்லி சூனியம் செய்திடும் ஜனங்களுக்கு இவர்கள் பயப்படுகிறார்கள்! நம் எல்லோருக் காகவும் ஆண்டவர் இயேசு சிலுவையில் செய்து முடித்த வல்ல செயலைக் காணும்படி உங்கள் கண்கள் திறக்கப்பட்டுவிட்டால், அடுத்த முறை நீங்கள் சாத்தானுக்கு ஒரு துளியும் அஞ்சவே மாட்டீர்கள்!

அன்று இயேசு பிரசங்கித்த ஆலயத்தில், பிசாசு பிடித்த ஜனங்கள் மூலம் கூட்டத்திற்கு இடைஞ்சல் செய்ய முயற்சித்ததைப் போலவே, இன்றும் கூட அவ்விதமே கிறிஸ்தவக் கூட்டங்களில் சாத்தான் அவ்வப்போது செய்ய முயற்சிக்கிறான். ஆனால் அவ்வாறு அவன் இடையூறு செய்வதற்கு நாம் ஒருக்காலும் அனுமதிக்கவே கூடாது. சில வருடங்களுக்கு முன்பு எங்கள் சபை ஹாலில் வேதபாடம் (BIBLE STUDY) நடந்து கொண்டிருந்த சமயம், ஓர் பிசாசு பிடித்த மனிதன் வாசலிலிருந்து பிரசங்க மேடை நோக்கி ஓர் பாம்பைப் போல் தரையில் ஊர்ந்து கொண்டு கூட்டத்தை இடையூறு செய்ய முயற்சித்தான். அச்சமயம் இயேசுவின் நாமத்தில் அந்தப் பிசாசைக் கடிந்து கொண்டவுடன், அந்த மனிதன் உடனடியாக அந்த இடத்திலேயே ஆழ்ந்து தூங்கிவிட்டான். வேதபாடம் முடிந்து.... நாங்கள் எல்லோரும் கடைசி ஜெபத்திற்கு "ஆமென்" சொன்னவுடன், அந்த மனிதன் எழுந்து விட்டான்! பின்பு நாங்கள் அந்த மனிதனிடம் பேசினோம். ஆம், சாத்தானின் எவ்வித தூண்டுதல் மூலமாகவும், வேதபாடத்திற்கு இடையூறு ஏற்படுவதை நாங்கள் சற்றேனும் அனுமதித்திடத் தயாராய் இல்லை!!

இன்னொரு சமயம், வெளியூரில் நடந்த பெரிய பொதுக் கூட்டத்தில், பிரசங்க மேடைக்கு முன்பாக ஒரு மனிதன் திடீரென்று நடனம் ஆடத் துவங்கிவிட்டான்! அவ்வேளையில், நான் சத்தியத்தின் மிக முக்கியமான பகுதியைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன்! மொழி பெயர்த்துக் கொண்டிருந்தவர் மூலமாய் நான் அந்த மனிதனை உட்காரச் சொன்ன போது அந்த மனிதன் என் வேண்டுகோளை அசட்டை செய்தான். உடனே நாங்கள் அந்த மனிதனுக்குள் இருந்த பிசாசை "**இயேசுவின் நாமத்தில்**" அதட்டியவுடன், அவன் போய், அமைதியாய் உட்கார்ந்து கொண்டான்!!

ஆம், இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுக்கப்பட்டவுடன் பிசாசுகள் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும்! ஏனென்றால் அவைகள் யாவும் இயேசு மூலமாய் கல்வாரியில் தோற்கடிக்கப்பட்டுவிட்டன!!

கல்வாரி சிலுவையில், சாத்தானை ஜெயித்த இயேசுகிறிஸ்துவின் வல்ல நாமத்தில் "சொல்லி முடியாத வல்லமை" இருப்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும். நீங்கள் ஒருக்காலும் சாத்தானுக்கு பயப்படத் தேவையே இல்லை! நீங்கள் உங்கள் சத்துருவை அறியாதிருந்தால் மாத்திரமே, அவன் உங்களுக்கு ஏதாகிலும் செய்து விடுவானோ என நீங்கள் அவனுக்குப் பயந்து வாழ வேண்டியதாய் இருக்கும்! சிலுவையில் இயேசு, சாத்தானை தோற்கடித்தபோதே அவனிடமிருந்த வல்லமை அனைத்தும் உரிக்கப்பட்டுவிட்டது! இப்பொழுது, **இந்த இயேசுவை,** வாலிபனே! உங்கள் ஜீவியம் முழுவதற்கும் **ஆண்டவராய்** வருவதற்கு அனுமதித்து விட்டால், சாத்தான் உங்களை ஒருக்காலும் தொடவே முடியாது!

# 2

## சாத்தானின் தோற்றம்

*முடிவில்லா நித்திய காலமாய் தேவன் இருக்கிறார்! என்பதை நாம் அறிந்திருக்கிறோம். "ஆதியிலே தேவன்...." (ஆதி.1:1) என்றே பரிசுத்த வேதாகமம் துவங்குகிறது. இவைகளே வேதாக மத்தின் முதல், இரண்டு வார்த்தைகள்! இந்த வார்த்தைகள் நித்தியத்தின் முற்கால யுகத்தை குறிப்பதாகவே இருக்கிறது. அந்த யுகத்தை நம்முடைய மனம் புரிந்து கொள்வதுகூட கஷ்டம். ஏனெனில் நம் மனம் தேவன் நியமித்த 'காலங்களை' மாத்திரமே அறிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கிறது. எனவே காலங்கள் தோன்றுவதற்கு முன்பாகவே தேவன் இருந்தார்!*

*ஆனால் சாத்தானோ, காலங்கள் தோன்று வதற்கு முன்பாகவே இருக்கவில்லை!* **சாத்தான் சிருஷ்டிக்கப்பட்டவனேயாவான்.** *அப்படியானால், பொல்லாத ஒருவனை தேவன் சிருஷ்டித்து விட்டாரா? இல்லவே இல்லை! அது ஒருக்காலும் அவரால் கூடாததாகும். ஆம், தேவனால் தீமையை ஒருக்காலும் சிருஷ்டிக்க முடியாது. அவர் சிருஷ்டித்தவைகள் அனைத்தும் பூரணமானவை களேயாகும். ஆதாமும் ஏவாளும்கூட "சிருஷ்டிக்கப் பட்ட போது" பூரணராகவே இருந்தார்கள். அதைப்போலவே, சாத்தான் சிருஷ்டிக்கப்பட்ட போது, அவனும் பூரணனாகவே இருந்தான். அவன்*



சிருஷ்டிக்கப்பட்ட காலம் முதலாய் "**பிரகாசமான விடிவெள்ளி**" **அல்லது** "**லூசிபர்**" என்றே அறியப்பட்டிருந்தான் (ஏசாயா.14:12). ஆனால் இப்போதோ அவனுடைய பெயருக்கு மோசமான அர்த்தம் உண்டாகி விட்டது! இந்த அவலநிலை அவன் முதலில் "சிருஷ்டிக்கப்பட்ட போது" இருக்கவில்லை.

'தூதகணங்கள்' தேவனை ஆராதிப்பதற்கு நடத்தும்படியே, அவன் தேவதூதர்களுக்குத் தலைவனாய் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான். இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமைகளையும் வல்லமைகளையும் தேவன் அவனுக்குத் தந்திருந்தார். ஆனால், இவைகளுக்குப் பின்பு அவன் பாவத்தில் விழுந்து சாத்தானாய் மாறிவிட்டான்!!

அன்று அவன் பெற்றிருந்த வல்லமைகளை இன்றும் அவன் பெற்றிருக்கிறான். ஏனென்றால், அவன் வீழ்ச்சியடைந்தபோது அவ்வல்லமைகளை தேவன் அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளவில்லை.

பிசாசிடமிருந்து வல்லமைகளை தேவன் ஏன் வாபஸ் வாங்க வில்லை? என நாம் ஆச்சரியப்படலாம்! அதற்கு காரணம் "தேவன் பொதுவாக, தான் தரும் வரங்களை திரும்ப வாங்கிக் கொள்வதில்லை" என்ற நியதியேயாகும். மானிடராகிய நாமேகூட பிறருக்கு அன்பளிப்பாகத் தந்தவைகளை, ஒரு நாளில் அவர்கள் எதிரிகளாய் மாறினால்கூட, அவைகளை அவர்களிடமிருந்து திரும்ப வாங்குவதில்லையே!

***இப்போது, ஜனங்களுக்குத் தீமை செய்வதற்கென்றே சாத்தான் தனது வல்லமைகளை உபயோகப்படுத்துகிறான்! ஆகவேதான் அவனோடு தொடர்பு கொள்ளும் மனிதர்கள், பில்லி சூனியங்கள் போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களைச் செய்கிறார்கள்!***

சாத்தானைக் குறித்து கீழ்காணும் விதமாய் வேதாகமத்தில் எழுதப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே ("பிரகாசமானவன்" என்பதே அவனுடைய பெயராய் இருந்தது), நீ வானத்திலிருந்து விழுந்தாயே!" (ஏசாயா.14:12).

ஆம், தூதர்களுக்கெல்லாம் தலைவனாய் இருந்த இந்த லூசிபர், தேவனுடைய சமூகத்தில் இடைவிடாது வாசம் செய்தவனாயிருந்தான். பின் ஏன் அவன் வீழ்ச்சியடைந்தான்? ஏனெனில், "நான் வானத்துக்கு **ஏறுவேன்,** தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை **உயர்த்துவேன். . .** உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று நீ **உன் இருதயத்தில்** சொன்னாயே.... நீ ஆகாதமான பாதாளத்தில் தள்ளுண்டு போனாய்" (ஏசாயா.14:13,14) என அடுத்த இரண்டு வசனங்களில் அவனுடைய வீழ்ச்சியின் தெளிவான காரணம் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். எல்லா தூதர்களைக் காட்டிலும் லூசிபர் அதிக வரங்களையும், அதிக வசீகரத்தையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிகமான திறமை களையும் பெற்றிருந்தான். அவனுடைய **இருதயத்தில் பெருமை** பிரவேசித்த

நாள் வரைக்கும், தேவ தூதர்களை தேவ ஆராதனைக்கு வழிநடத்திய வனாகவே இருந்தான். இதற்கு பின்புதான் அவனுடைய உள்ளத்தில், "எனக்கு மேலாக ஒருவர்தானே இருக்கிறார்..... அந்த ஒரு நபரும் தேவன் மாத்திரமே! நான் அவரையும் சேர்த்து ஆண்டுகொள்வேன்" என எண்ணத் துவங்கினான்.

உண்மையில் இந்த எண்ணம் அவனுடைய உள்ளத்தில் தோன்றிய ஓர் முட்டாள்தனமான எண்ணமேயாகும்! தன்னைச் சிருஷ்டித்த சிருஷ்டிகருக்கு மேலாக அவனால் எப்படி மேலே ஏற முடியும்? ஆனால் சாத்தான் இப்படித்தான் இருக்கிறான்! அதாவது, அவன் எவ்வளவுதான் திறமைமிக்க கெட்டிக்காரனாய் இருந்தாலும், அநேகமான அவனுடைய செயலும், எண்ணமும் சர்வமுட்டாள்தனமாகவே இருக்கிறது!! ஆவிக்குரிய பிரகாரமாகச் சொல்வோமென்றால், இன்றைய உலகத்திலும், சாமர்த்தியம் நிறைந்த ஏராளமான ஜனங்கள் 'வடிகட்டிய முட்டாள்தனமான' எண்ணற்ற செயல்களை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்! சாத்தானைப் பற்றி எவ்வளவு அதிகம் நாம் கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவு அதிகமாய் அவனுடைய ஏராளமான செய்கைகளில், எவ்வளவு மதியீனம் ஆட் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் காணமுடியும்!

பாருங்கள், சாத்தானுக்கு தேவன் ஏற்படுத்தித்தந்த வாசஸ்தலத்தில் அவன் மகிழ்ச்சியாய் இருக்கவில்லை. எல்லோரும் தன்னை ஆராதிக்கும் படியாக உன்னதத்திற்கு ஏறிடவே அவன் விரும்பினான்! தன்னை எல்லோரும் ஆராதிக்க வேண்டுமென்ற விருப்பத்தை அவன் வாய்திறந்து சொல்லவில்லை. ஆனால் அதற்கு ஒப்பான சிந்தனைகளை அவன் **தன் இருதயத்தில்** சிந்திக்கத் துவங்கிவிட்டான் (வசனம் 13).

***தேவன் நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறவரானபடியால், சாத்தானுடைய இருதயத்தையும் கண்டு, அவன் எதை இலக்காக வைத்திருந்தான் என்பதை அவர் தெளிவாகக் கண்டார்!***

இங்குதான் 'சோதனைக்கும்' 'பாவத்துக்கும்' இடையில் ஓர் பெருத்த வித்தியாசம் இருப்பதை நாம் காண்கிறோம். நம் மனதில் தோன்றும் சிந்தையாகவே முதலில் சோதனை வருகிறது. அந்த சிந்தைக்கு இடம் தந்து, அதோடு இசைந்த பிறகே நாம் பாவம் செய்கிறோம். இச்சமயத்தில், நாம் உடனடியாக அந்த சிந்தையை உதறித் தள்ளிவிட்டால், நாம் பாவம் செய்திட மாட்டோம் (யாக்.1:14, 15).

உதாரணமாய், பிறருக்கு உங்களை மேன்மையாய் காட்டும் பொருட்டு, "அநேகருக்கு முன்பாக யாரோ ஒரு நபரை அடித்து வீழ்த்துவது போல்" ஓர் தீமையான சிந்தை என்றைக்காவது உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறதா? இதுபோன்ற சிந்தை தோன்றிய முதல் நபர் யார் என்று அறிவீர்களா? அவன் லூசிபரே ஆவான்! அவன் யாரை கீழே இழுத்து வீழ்த்திவிட விரும்பினான்? தூதர்களையல்ல, ஏனெனில்

அவர்கள் ஏற்கனவே அவனுக்கு கீழ்தான் இருந்தார்கள். ஆம், அவன் "தேவனையே!" கீழே தள்ள விரும்பினான். உங்களை நீங்கள் மேலே உயர்த்துவதற்காக யாரோ சிலரை கீழே இழுத்திடச் செய்யும் செயல் சாத்தானுடைய ஆவியேயாகும்!

உங்கள் சத்துருவாகிய சாத்தானை நீங்கள் கண்டிப்பாய் அறிந்திருக்க வேண்டும் என நான் உங்களிடம் எதற்காக கூறுகிறேன்? ஏனென்றால், மேற்கண்டது போன்ற சிந்தை உங்கள் மனதில் பிரவேசிக்கும்போது, உங்கள் சத்துரு "உங்களுக்குள் வருவதை" நீங்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகவேயாகும்! ஆம், **கொர்ச்சிக்கிற சிங்கம்** உங்களை எப்போது விழுங்கலாமென காத்துக் கொண்டிருக்கிறது!

மாபிரதான தூதன், பிசாசாய் மாறுவதற்கு அநேக வருடங்கள் பிடிக்கவில்லை! 'நொடிப்பொழுதில்' பிசாசாய் மாறிவிட்டான்!! ஆம், படிப்படியாய், கொஞ்சம் கொஞ்சமாய் அவன் வீழ்ச்சியடையவில்லை. நொடிப்பொழுதில் "மின்னலைப் போல்" கீழே விழுந்தான் என இயேசு குறிப்பிட்டார் (லூக்கா.10:18). "தேவனுக்கொப்பாய் மாறலாமே!" என்ற சிந்தையை உள்ளத்தில் வைத்து அசைபோடத் தொடங்கிய அடுத்த கணமே அவன் பிசாசாய் மாறிவிட்டான்.

***"ஒரு தூதன்" பிசாசாய் மாறுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? ஒரு விநாடிப்பொழுது என்றுகூட சொல்ல முடியாது. "சடிதிப் பொழுதில்" என்றே சொல்ல வேண்டும்.***

மெய்யாகவே நற்குணம் நிறைந்த ஒருவர் பிசாசாய் மாறுவதற்கு எவ்வளவு காலம் ஆகும்? நொடிப்பொழுதுகூட அல்ல... "சடிதியில்", அவ்வளவுதான்! இதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!!

சாத்தானுடைய தோற்றத்தைப்பற்றி எடுத்துக்கூறும் மற்றொரு புத்தகம் எசேக்கியேல்.28 ஆகும். இந்த அதிகாரத்தில் சாத்தான் "தீருவின் ராஜா" என்று அழைக்கப்படுகிறான் (எசேக்கியேல்.28:12). அதாவது, இவ்வுலகத்தை ஆளுகிறவர்களுக்குப் பின்பாக, பிசாசின் வல்லமைகள் அணிவகுத்து நிற்கின்றன என்ற உண்மையையே இது எடுத்துக்காட்டுகிறது. அந்நாட்களில் தீருவின் ராஜாவுக்குப் பின்பாக "சாத்தானே" நேரடியாக ஆட்கொண்டிருந்தான். ஆகவேதான் ஆண்டவர் சாத்தானிடம் பேசுவதற்கு ஒப்பாக, சாத்தான் குடி கொண்டிருந்த அந்த மானிட ராஜாவினிடத்தில் பேசினார்!

இவ்வாறு, ஆண்டவர் சாத்தானிடம் பேசியபோது, அவன் ஏதேன் தோட்டத்தில் இருந்த நாட்களை நினைவுபடுத்தினார் (எசேக்கியல்.18:13). இவ்வசனத்திலிருந்து, ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்ததற்கு முன்பாகவே லூசிபர் அங்கு இருந்தான் என்ற உண்மை தெளிவாகிறது. மேலும், "அவன் சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி,

அவனில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும்.... தன் வழிகளில் குறையற்றிருந்தான்" (வசனம்.15) என்று அவனுடைய ஆதிமேன்மை நிலையையும் சாத்தானுக்கு ஆண்டவர் நினைப்பூட்டினார்.

பிரதானமாக, தன்னுடைய "**அழகின்**" நிமித்தமே லூசிபரின் இருதயம் மேட்டிமை அடைந்தது. இதேபோல, உங்கள் முகத்தை நீங்கள் கண்ணாடியில் பார்க்கும்போது, மற்றவர்களைவிட அழகாக காணப்படுகிறீர்கள் என்பதால் **உங்கள் இருதயம்** எப்போதாவது மேட்டிமை உணர்வு கொண்டிருந்ததா? இதுபோன்ற மேட்டிமைக்கு, எச்சரிக்கையாயிருங்கள்! தேவன் உங்களுக்குத் தந்த நன்மையானவை களுக்காக அவரை ஸ்தோத்தரியுங்கள். பார்ப்பதற்கு அழகாய் இருக்கும் முகத்தை நீங்கள் பெற்றிருப்பதில் தவறேதும் இல்லை. ஆனால் அதைக்குறித்து, நீங்கள் பெருமை கொண்டால் அது எவ்விதத்திலும் முழுக்க முழுக்க தவறான செயலேயாகும். இச்சமயத்தில்தான் நீங்கள் சாத்தானுக்கு உங்கள் கதவைத் திறக்கிறீர்கள்!

லூசிபரின் பெருமைக்கான அடுத்த காரணம் அவன் பெற்றிருந்த "**அறிவு நிறைந்த ஞானமாகும்**". சிருஷ்டிக்கப்பட்ட எல்லோரைக் காட்டிலும் சாத்தானே அதிக ஞானம் நிறைந்தவனாய் இருந்தான் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒருவன் திறமையான ஞானத்தை பெற்றிருப்பதில் எந்த தவறும் இல்லை. நம்முடைய புத்திகூர்மையை தேவனுடைய மகிமைக்காக நாம் பயன்படுத்த முடியுமே! 'ஆனால்' அதைக்குறித்து நாம் பெருமை அடைவதற்கோ நமக்கு எந்த உரிமையும் கிடையாது. நாம் ஒரு புத்தி கூர்மையற்ற முட்டாளாய் தேவனை சேவிக்க வேண்டும் என்பது பொருளல்ல.

***உங்கள் புத்திகூர்மைக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஆனால் இவைகளில் யாதொன்றைக் குறித்தாகிலும் நீங்கள் ஒருக்காலும் பெருமையடைந்து விடாதீர்கள்.***

லூசிபரின் பெருமைக்கு மூன்றாவது காரணம், அவன் சிருஷ்டிக்கப்பட்ட எல்லோரைக் காட்டிலும் "**உயர்ந்த ஸ்தானத்தைப்**" பெற்றிருந்தான். இவ்வாறாக தன்னுடைய அழகு, தன் புத்திகூர்மை, தன்னுடைய உயர்ந்த ஸ்தானம் ஆகிய இந்த மூன்றினிமித்தம், தான் பெருமை கொண்டிருந்ததை லூசிபர் உணர்ந்திடத் தவறிவிட்டான். லூசிபர் பெற்றிருந்தவை யாவும் தேவன் அவனுக்கு அருளிச் செய்த வரங்களே ஆகும். இன்றும், திரளான மானிடர்கள் குறிப்பாக கிறிஸ்தவர்கள்கூட, தங்களைப் பெருமை கொள்ளச் செய்யும் மேற் கண்ட மூன்றுபகுதிகளை உணர்ந்திடத் தவறுகிறார்கள். ஆகவேதான், இவர்களுடைய ஜீவியத்தில் சாத்தான் மிக எளிதில் பிரவேசித்து, முடிவில் அவர்களை அழித்தும் விடுகிறான்!

மேற்கண்ட சத்தியத்திலிருந்து, இவ்வுலகத்தில் நாம் காணும் எல்லாப் பாவங்களும் **பெருமையிலிருந்தே** தோன்றியுள்ளது என்பதை

தெளிவாய் நாம் காண்கிறோம். ஆம், கொலையோ அல்லது விபச்சாரமோ அல்ல, "பெருமையே" பாவத்திற்கு காரணம்! இதனிமித்தமே தன்னைத்தானே தாழ்த்திய இயேசுவின் மூலமாய் இரட்சிப்பு இப்பூமியில் மலர்ந்தது!

***தாழ்மையின் வழியே, சாத்தானுடைய எல்லாத் தந்திரங்களி லிருந்தும் விடுதலையாவதற்குரிய சீரிய வழியாகும்!***

மேலும், "தனக்கு நியமிக்கப்பட்டிருந்த பங்கில்" லூசிபருக்கு **அதிருப்தியான ஆவி** உருவானதையும் நாம் காண்கிறோம். தேவன் காண்கிற விதமாய், நாம் இவ்வுலகத்தை கூர்ந்து காண முடியுமென்றால், தர்க்கிப்பும், குறைசொல்லுதலும், முறுமுறுப்பும் நிறைந்த ஜனங்களால் இவ்வுலகம் நிறைந்திருப்பதை நாம் காணமுடியும். ஆம், இவர்கள் யாவரும் இந்த அதிருப்தியான ஆவியை சாத்தானிடமிருந்தே பெற்றார்கள்!

"ஆளுகைக்கு விரோதமான **முரட்டாட்ட ஆவியின்**" தோற்றமும் லூசிபரிடமிருந்தே தோன்றியது. லூசிபருக்கு இருந்த ஒரே ஆளுகை தேவன் மாத்திரமே ஆகும்! ஆனால் அவனோ அந்த ஆளுகைக்கு விரோதமாய் முரட்டாட்டம் செய்தான். தன்மீது இருந்த ஆளுகைக்கு மேலாய் சென்று தேவனை கீழே வீழ்த்திவிட அவன் விரும்பினான்!

மனுவர்க்கத்தில், ஆளுகைக்கு விரோதமான இந்த முரட்டாட்ட ஆவியை உங்களால் காணமுடிகின்றதா? நாம் பற்பல தேசங்களில் காணும் ஏராளமான புரட்சிகள், இவ்வித ஆளுகைக்கு விரோதமாக எழும்பும் முரட்டாட்ட ஆவியிலிருந்து தோன்றியதேயாகும்! தொழிற் சாலை போன்ற இடங்களில் நாம் காணும் "வேலை நிறுத்தங்களும்" இந்த முரட்டாட்ட ஆவியிலிருந்தே தோன்றியதாகும்!! நம்முடைய நாட்களில் இந்த முரட்டாட்ட ஆவி, மாணவர்களிடம் கூட காணப் படுவதை நாம் காண்கிறோம். வீட்டிலுள்ள சிறுபிள்ளைகளிடம் கூட இந்த முரட்டாட்ட ஆவி காணப்படுவதை நாம் கண்கூடாக காண்கிறோம்! இவையாவும், இவ்வுலகம் எவ்வளவாய் சீர்கேட்டிற்குள் போகிறது என்பதைக் காட்டும் தெளிவான அடையாளமாகும்.

***ஆளுகைக்குரிய ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், சபை களிலுள்ள மூத்த சகோதரர்களையும்கூட அவமரியாதை செய்திடும் செயலை நாம் சர்வசாதாரணமாக எங்கும் காண்கிறோம்.***

நாமோ எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம்! ஏனெனில், இந்த முரட்டாட்ட ஆவிதான் தூதர்களுக்கெல்லாம் சிறந்த தூதனை ஓர் பிசாசாக மாற்றிவிட்டது! எனவே, இன்றும்கூட ஒரு நல்ல வாலிபனையும், ஒரு நல்ல வாலிப ஸ்திரீயையும் இந்த ஆவி மிக எளிதில் அவர்களைப் பிசாசாக மாற்றிவிட முடியும்!

தேவன் ஒருவரையும் தீமையாக சிருஷ்டிக்கவேயில்லை. சாத்தானின் ஆவிக்கு "நாம்" இடம் தருவதால் மாத்திரமே, நம்மை

*நாமே தீமை நிறைந்தவர்களாய் மாற்றிக்கொள்கிறோம்!*

***லூசிபரிடம் காணப்படும் ஓர் கடைசி குணாதிசயத்தை இப்போது கேளுங்கள். அவன் வீழ்ச்சியடைந்தபோது அவன் மாத்திரம் விழவில்லை! தனக்கென்று ஒரு பெரிய குழுவை சேர்த்து விட்டான்!***

*அவன் தன்னோடுகூட "மூன்றில் ஒரு பங்கு" தூதர் குழாமை இழுத்துக் கொண்டான் என வெளி.12:4-ல் வாசிக்கிறோம். ஆம், அந்த தூதர்கள் கூட மதியீனமாய் சாத்தானுடைய பெருமை, திருப்தி யற்றிருத்தல், முரட்டாட்டம், ஆகிய அவனுடைய ஆவியோடு தங்களையும் இணைத்துக் கொண்டார்கள்!*

*இன்றைக்கும் இதே துயரத்தைத்தான் நாம் காண்கிறோம். ஒருவன் தீமையுள்ளவனாய் இருக்கும்போது, அவன் மாத்திரமே அவ்வாறு தீமையாய் இருப்பதில் திருப்தி காண்பதில்லை! தன்னுடைய தீமைக்கும் அதன் துன்பத்திற்கும், தன்னோடுகூட மற்றவர்களையும் இழுத்துக் கொள்ளவே அவன் விரும்புகிறான். மற்றவர்கள் "விழிப்பாய்" இல்லையென்றால், ஒருவனிடம் காணப்படும் "கசப்பின் வேர்!" அநேகரைக் கெடுத்துவிட முடியும் (எபி.12:15) என தேவ வசனம் நம்மை எச்சரிக்கிறது!!*

3

## சாத்தானின் வஞ்சகம்

***சா****த்தான் தன்னுடைய தாக்குதலை எவ்வாறு தொடுக்கிறான் என்பதை ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் மிகத் தெளிவாகக் காண்கிறோம். இந்த அதிகாரம் நமக்குத் தெரிவிக்கிறபடி, எல்லா மிருகங்களைக் காட்டிலும்* **சர்ப்பமானது** *மிகத் தந்திரமுள்ளது எனக் காண்கிறோம்! கதரேனின் கல்லறையண்டையில் வாசம் செய்த மனிதனிடமிருந்து இயேசு பிசாசுகளைத் துரத்தியபோது, அவைகள் பன்றிகளுக்குள் பிரவேசித்தது போல, ஏதேன் தோட்டத்தில் சாத்தான் தந்திரமாக சர்ப்பத்திற்குள் பிரவேசித்தான். சர்ப்பத்தின் மூலமாய் சாத்தான் ஏவாளிடம் பேசி, "நீங்கள் தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ?" எனக் கேட்டான். அதற்கு ஏவாள் "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்" என பதில் சொல்லியவுடன், சாத்தானோ* **தேவன் சொன்ன வார்த்தைக்கு நேர் எதிரிடையாய்,** *"நீங்கள் சாகவே சாவதில்லை!" என ஆணித்தரமாய் கூறினான்.*



*மேற்கண்ட நிகழ்ச்சியிலிருந்து, சாத்தான்*

நம்மிடம் பிரவேசிக்கும் விதத்தைக் கவனியுங்கள். நம்மிடம் பிரவேசிப்பதற்கு அவன் செய்திடும் முதல் உபாயம், **தேவனுடைய வார்த்தையை சந்தேகித்து கேள்வி எழும்படிச்** செய்வதுதான்! ஏவாளிடத்தில் போலவே இன்றும் அவன் நம்மிடமும் வருகிறான், "நாம் இதைச் செய்யக்கூடாது என தேவன் மெய்யாகவே சொல்லியிருக்கிறாரா?" மேலும், "இதைச் செய்வதால் என்ன தவறு? வேதப்புத்தகத்தில் நாம் காணும் கட்டளைகள் பழங்காலத்திற்கு உரியவைகள்! அக்காலத்து கலாச்சார அடிப்படையில், பவுல் வாழ்ந்த நாட்களில் இவைகள் எழுதப்பட்டுள்ளன. அன்று எழுதப்பட்டவைகளை, இன்று 20-ம் நூற்றாண்டில் வாழும் நாம் அவ்வசனத்தின்படியே கீழ்ப்படிவதற்கு ஏற்றவை அல்ல!" என்றே சாத்தான் பேசுவான்!

இதே கேள்விகளைத்தான் இன்று வாலிபர்களும், பெரியவர்களும் இடைவிடாது கேட்பதை காண்கிறோம். இவ்வித தங்கள் செயலால், தாங்கள் சாத்தானின் 'வாயாக' மாறுகிறோம் என்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்கள். இச்சமயங்களில் "இவ்வாறு செய்வது தவறு!" என இவர்களுடைய மனசாட்சி கூறினாலும், தங்களுடைய காரணம் கண்டுபிடிக்கும் புத்திகூர்மையைப் பயன்படுத்தி, தேவன் விலக்கி வைத்தவைகளைக் குறித்து தொடர்ச்சியாய் கேள்வி கேட்கிறார்கள்!

ஏதாகிலும் ஒன்றைச் செய்யும்படி தேவன் தம்முடைய வார்த்தையில் கட்டளையிட்டிருந்தாலோ அல்லது தடைசெய்திருந் தாலோ..... அவ்வாறு தேவன் செய்ததற்கு சிறந்த காரணம் இருக்கக் கூடும் என நாம் நிச்சயமாய் அறிந்திருக்க வேண்டும்! இதற்கு மாறாக, "நிஜமாகவே தேவன் இவ்விதம் சொன்னாரா?" என்றே சாத்தான் எப்போதும் நம்மிடம் சந்தேகக் கேள்வியை எழுப்புகிறான்.

இவ்வாறு தேவனுடைய வார்த்தையை நாம் கேள்வி கேட்கும்படிச் செய்வதில் சாத்தானுடைய முடிவான நோக்கம் என்ன? ஏவாளிடம் என்ன நோக்கத்துடன் செயல்பட்டானோ, அதே நோக்கத்தைத்தான் இப்போதும் சாத்தான் கொண்டிருக்கிறான்.

> ***அதாவது, நம்மை ஆண்டவரிடமிருந்து பிரித்து, தேவனுடைய சமூகத்திலிருந்து ஆதாமையும் ஏவாளையும் தேவன் விரட்டியது போல நம்மையும் அவருடைய சமூகத்திலிருந்து தேவன் விரட்டும்படிச் செய்ய வேண்டும் என்பதே சாத்தானுடைய நோக்கமாகும்!!***

"சாத்தான் ஓர் திருடன்!" என இயேசு ஒரு முறை குறிப்பிட்டுக் கூறினார். சாத்தான் பணத்தைத் திருடுவதில்லை! ஏனென்றால் பணத்திற்கு 'நித்திய மதிப்பு' ஏதுமில்லை என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்! நித்திய மதிப்புடையவைகளையே - குறிப்பாக மனுஷருடைய ஆத்துமாக்களையே அவன் கொள்ளையாடுகிறான். இவ்வாறு சாத்தான் கொள்ளையாடிய பின்பு, தான் கொள்ளையிட்டவைகளைக்

கொல்லவும் பின்பு அழிக்கவும் செய்கிறான் என இயேசு எச்சரித்தார் (யோவான்.10:10). ஆனால் இயேசுவோ இதற்கு நேர்மாறாக, "என் ஆடுகளுக்கு (நமக்கு) பரிபூரண ஜீவன் தரும்படியே" தான் வந்ததாகக் குறிப்பிட்டார்!!

காரியம் இவ்வாறாக இருக்கையில், இவ்வுலகத்தில் உள்ள 6,000 மில்லியன் ஜனங்களில் 90%க்கும் மேலான ஜனங்கள், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் கூறிய தேவ வார்த்தைகளுக்கு கீழ்படிவதற்கு பதிலாய் "**சாத்தானுடைய பொய்யை விசுவாசித்து**" அவனுக்கு கீழ்ப்படிவதையே தெரிந்து கொண்டிருப்பது ஓர் அதிர்ச்சி மிக்க ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? இவ்வாறு, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் இருப்பது, அப்படியொன்றும் 'சீரியஸான' விஷயமில்லை என ஜனங்களை அவன் நம்ப வைத்திருப்பதும் உண்மையிலேயே சாத்தானின் ஓர் மகத்தான கிரியையாகும்!

இன்று ஜனங்கள் முதன் முதலாக மது அருந்தும்போது அல்லது தங்கள் முதல் சிகரெட்டைப் புகைக்கும்போது அல்லது போதை மருந்துகளாகிய 'ஹெராயின்' மற்றும் 'கொக்கோயின்' போன்ற வைகளை எடுக்கத் துவங்கும்போது, அவைகள் அவர்களுடைய சரீரங்களையும் மனதையும் பாழ்படுத்தி, முடிவில் அவர்கள் ஆத்துமாவை நரகத்திற்கு கொண்டு சென்றுவிடும் என்ற உண்மையை சாத்தான் எடுத்துக்கூறி எச்சரிப்பான் என்றா எண்ணுகிறீர்கள்? இல்லை, இல்லவே இல்லை! அவர்களுக்கு அவன் உண்மையைக் கூறுவதே யில்லை. அவ்வாறு கூறினால், அதை கேட்பது இனிமையற்றதாய் இருக்கும் என சாத்தானுக்குத் தெரியும்!!

***மாறாக, இவ்விதப் பழக்கங்களை ஜனங்கள் ஆரம்பிக்கும்போது "அவைகள் அவர்களுக்கு வீரமிக்க பரவசத்தைத் தரும்" என்றே கூறுகிறான். இதே பொய்யைத்தான் சாத்தான் ஏவாளுக்கும் கூறினான்!***

இவ்வாறாகவே இன்று உலகத்தில் உள்ள கோடிக்கணக்கான வாலிப உள்ளங்களை சாத்தான் வஞ்சித்துக் கொண்டிருக்கிறான். விபச்சாரம் செய்வது, பிறருடைய பொருளை திருடுவது.... போன்ற அருவருக்கத் தகுந்த பாவங்களைக் கூட "இவைகளைச் செய்வதில் என்ன தவறு இருக்கிறது? பழைய 19-ம் நூற்றாண்டு மனுஷர்களாய் இருக்கிறீர்களே...." என சாத்தான் நயவஞ்சகமாய் பேசுகிறான். இவ்வித நயவஞ்சக சிந்தைகளையெல்லாம் சாத்தான் உங்கள் மனதில் போடும் போது, அவனுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். ஆம், உங்களை அழிப்பதே அவனுடைய முடிவான நோக்கம்!

ஏவாள் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த அடுத்த கணமே "அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லது..." என்ற எண்ணம் தோன்றி, அம்மரத்தை நோக்கி அவளுடைய சரீரம் ஈர்க்கப்பட்டது என

*ஆதியாகமம்.3:6-ம் வசனம் கூறுகிறது. இன்றும், இந்த விலக்கப்பட்ட கனி 20-ம் நூற்றாண்டின் பல்வேறு தீமைக்குச் சமமாகவே இருக்கிறது. தேவன் விலக்கி வைத்திருக்கும் எத்தனையோ பகுதிகளை நோக்கி நம் சரீரங்கள் ஈர்க்கப்படுவதை நாம் காண்கிறோமே!*

*தொடர்ந்து வேதவசனம் கூறும்போது "அந்த மரம் பார்வைக்கு இன்பமானது...." என ஏவாள் கண்டதாக குறிப்பிடுகிறது. ஆம், நாம் பார்ப்பதற்கு தேவன் தடை செய்தவைகளையே நம்* **கண்கள்** *அதிக இன்பமாய் ரசித்திட முயற்சிக்கும். மேலும், அந்த கனி அவளுடைய "புத்தியை தெளிவித்து" ஞானமுள்ளவளாய் மாற்றும் எனவும் ஏவாள் கண்டாள். ஆம், தேவன் விலக்கி வைத்தவைகளுக்கு நம்முடைய மனம் கூட ஈர்க்கப்படுவதை நாம் காண்கிறோம். இவ்வாறு உங்கள் மனசாட்சி தவறு என்று சுட்டிக்காட்டும் யாதொன்றினிமித்தமாக, உங்கள் சரீரமும் உங்கள் மனதும் ஈர்க்கப்படாமலிருக்க மிகுந்த கவனமாயிருங்கள்!*

*இவ்வாறு ஈர்க்கப்பட்ட வேளையில், "ஏவாளே, நீ செய்யப் போவது தவறு!" என அவளுடைய மனசாட்சி அவளிடம் தெளிவாகப் பேசியிருக்கும் என நான் நிச்சயமாய் நம்புகிறேன். ஏனென்றால், அந்தப் பழத்தை புசிக்கக்கூடாது என தேவன் தனக்குச் சொன்னதை ஏவாள் நன்கு அறிந்திருந்தாள். ஆனால் அவள் செய்தது என்ன?*

> ***அவளுடைய 'சரீரமும்' 'மனதும்' அக்கனியை விரும்பியபடியால், அதைப் புசிப்பதில் எவ்வித தவறும் வந்துவிடாது என தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்! அடுத்தகட்டமாக, அவள் தன் மனசாட்சிக்கு விரோதமாக அக்கனியைப் பறித்துப் புசித்தாள்!!***

*இவ்வாறு, ஏவாளைப் பாவம் செய்ய வைத்ததால் சாத்தான் என்னத்தைச் சாதித்துவிட்டான்? பல ஆண்டுகளுக்கு முன்பு அவனே தேவனுடைய சமூகத்தினின்று வீழ்ச்சியுற்றவன்! தான் தீமையாய் மாறியதினிமித்தம், மற்றவர்களையும் தீமையாய் மாற்றுவதற்கே அவன் தீர்மானம் கொண்டிருந்தான்! இன்றைய மனுவர்க்கத்தை ஆட்கொண்டிருக்கும் நிலை இதுதான். ஒருவன் ஏதோ தீமையை செய்யும் போது, தான் மாத்திரமே அந்த தீமையில் தனித்திருப்பதில் அவன் மகிழ்ச்சியடைவதில்லை. மற்றவர்களும் அதே தீமையைச் செய்வதற்கு அவன் விரும்புகிறான்!*

*வாலிபர்களாகிய நீங்கள் யாவரும் நீதிமொழிகள் புத்தகத்தை கவனித்து வாசிக்குமாறு உற்சாகப்படுத்துகிறேன். இப்புத்தகம், அனேக அபாயமான கண்ணியிலிருந்து உங்களை நிச்சயமாய் காத்திட முடியும். நீதி.1:10 -ம் வசனத்தில் "நீ தீமை செய்யும்படி நடத்திச் செல்லும் சிலரோடு சேர்ந்து போகாதே" (ஆங்கில வேதாகமம்) எனக்கூறும் எச்சரிப்பை கவனியுங்கள்!*

*சாத்தான் தீமையானவனாய் மாறினபடியால், தன்னோடு*

ஏவாளையும் இழுக்க விரும்பினான். அவனுடைய நச்சு ஆவியினால் பாதிக்கப்பட்ட ஏவாள் இப்போது தன்னோடுகூட தன் கணவனையும் இழுக்க விரும்பினாள்! எனவேதான் "தான் புசித்த பின்பு" மற்றொரு பழத்தைப் பறித்து தன் கணவனுக்கும் கொடுத்தாள்!

இந்த விகிதாச்சார அடிப்படையில்தான் இந்த உலகில் பல நூற்றாண்டு காலமாய் தீமை பலுகிப்பெருகியுள்ளது. ஒரு மனுஷன் தீமையானவனாய் மாறி மற்றவர்களையும் தன்னோடு தீமைக்கு இழுக்கும் கொடிய விகிதாச்சாரம்!

இதனிமித்தமே நாம் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. சாத்தான் நம்மிடம் வரும் போதெல்லாம் ஓர் கெர்ச்சிக்கிற சிங்கமாய் வந்தால் அவனை மிக எளிதில் நாம் இனம் கண்டுகொள்ள முடியும். ஆனால் அவனோ கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எப்போதும் வருவதில்லை! அவன் சில வேளைகளில் "வசீகரமான சௌந்தரியத்தோடும்" பொழிவூட்டும் "ஒளியின் தூதனாகவும்" (2கொரி. 11:14) வருகிறான். இதனிமித்தமே நாம் மெய்யாகவே மிகுந்த கவனம் கொண்டவர்களாய் இருக்க வேண்டியுள்ளது.

இயேசு தன் சீஷர்களிடம், தான் பாடுபட்டு சிலுவையில் மரிக்கப் போவதைக் குறித்து கூறிய சம்பவத்தை சற்று மனதின் முன் நிறுத்திப் பாருங்கள். அவ்வேளையில் பேதுரு, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே!" என இயேசுவிடம் பரிவுடன் கூறினான். ஆனால் இயேசுவோ பேதுருவை உடனடியாகக் கடிந்துகொண்டு, "எனக்குப் பின்னாகப்போ சாத்தானே!" எனக் கூறிவிட்டார் (மத்தேயு 16:23).

***சிலுவையின் மரணத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற "பரிவான" வார்த்தைகள் பேதுரு மூலமாய் வந்தாலும், அது "சாத்தானுடைய சத்தமே" என்பதை இயேசு தெளிவாக கண்டுபிடித்துவிட்டார்.***

தான் சிலுவைக்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஏனென்றால், மனுஷருடைய பாவங்கள் மன்னிக்கப் படுவதற்கு அந்த வழியைத் தவிர வேறுவழி இல்லவே இல்லை. பேதுருவோ இந்த உண்மையை அறியவில்லை. பேதுரு காரியத்தை நன்றாக விளங்கித்தான் பேசினான். ஆனால், இயேசு சிலுவைக்குப் போவதை நிறுத்துவதற்கு, சாத்தான் தன்மூலமாக முயற்சிக்கிறான் என்ற உண்மையை "அச்சமயத்தில்" பேதுரு உணரவில்லை! ஆம், நமக்கு நெருக்கமான நண்பர்கள் மூலமாகக்கூட சாத்தான் நம்மிடம் வந்து சில ஆலோசனைகளைக் கூறுவான். அந்த ஆலோசனைகள் மனுஷீகப் பிரகாரமாய் மனதுருக்கமும், நன்மை நிறைந்ததாயும் காணப்பட முடியும். ஆகவேதான், நாம் எல்லா நேரங்களிலும் கண்டிப்பாய் விழிப்புடன் இருக்கவேண்டும்!!

***இவ்வேளையில் நாம் அனைவரும் விரும்பி நாட வேண்டிய ஒன்று: "உணர்வுமிக்கதோர் மனசாட்சியாகும்". நாம் மிகச் சிறிய***

***தவறு செய்தாலும், இந்த உணர்வுள்ள மனசாட்சி நம்மிடம் 'உரத்த சத்தமாய்' பேசும் நிலையில் நம்முடைய மனசாட்சி இருக்க வேண்டும்!***

*உங்கள் வீட்டிலிருக்கும் கைக்குழந்தையின் பாதங்களைப் பாருங்கள். அவைகள் எவ்வளவு இளமையும் எவ்வளவு மெதுவாகவும் இருக்கிறது! அப்பாதங்களை உங்கள் பாதங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். ஆ, எத்தனை வித்தியாசம்! உங்கள் பாதங்கள் எவ்வளவு கடினமாய் மாறிவிட்டது. இதேபோலவே உங்கள் மனசாட்சிக்கும் சம்பவித்திடக்கூடும்!*

*நீங்கள் இப்பூமியில் பிறந்தபோது, உங்கள் கைக்குழந்தையின் பாதங்களைப் போன்ற அதிக உணர்வுள்ளதோர் மனசாட்சி உங்களுக்கு இருந்தது. நீங்கள் செய்த சிறு சிறு தவறுகளுக்கெல்லாம் உங்கள் மனசாட்சி மிகுந்த உணர்வுடன் செயல்பட்டது. ஆனால் நீங்கள் வளர்ந்தவுடன், உங்கள் பெற்றோர்களிடம் பொய் சொன்னீர்கள்; அவர்களை ஏமாற்றினீர்கள்; சில பொருட்களை திருடினீர்கள்; அநேக விதத்தில் பலருக்கு தீங்கு செய்தீர்கள்; பரீட்சைகளில் ஏமாற்றினீர்கள்; பெற்றோருக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணினீர்கள்... இன்னும் இதுபோன்ற ஏராளமான தீமைகளைச் செய்தீர்கள். இவ்வாறாக உங்கள் மனசாட்சியை அலட்சியம் செய்து, காலின் கீழ்போட்டு மிதித்து விட்டபடியால்* **இன்று உங்கள் மனசாட்சி** *உங்கள் பாதங்களைப் போலவே கடினமும்; பாவத்திற்கு உணர்வற்றதாயும் மாறிவிட்டது!*

*பவுல் கூறும்போது, "சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2கொரி.2:11) எனக்கூறினார்.*

*ஏவாளிடம் சாத்தான் மிகத் தந்திரமாய் வந்து, பார்ப்பதற்கு மிக கவர்ச்சியான ஒன்றின் மூலமாய் அவளைச் சோதனைக்குத் தூண்டி.... முடிவில் அவளை அழித்துவிட்டான். இன்றும் இதேபோலவேதான் நம்மை அழிக்கும்படியும் சாத்தான் வருகிறான்! நம்மிடம் வரும்போது, நாம் மேலே கண்ட தந்திரமான பாவ தீமைகளோடு மாத்திரமல்லாமல், அவனை நேரடியாக ஆராதிக்கச் செய்யும் வழிமுறைகளோடும் வருகிறான். அவன் ஜனங்களை பில்லி சூனியத்தின் மூலம் வழிதப்பி போகச் செய்கிறான் அல்லது* **"பாம்புக்கட்டம்" அல்லது "வீஜா" போர்டு** *போன்ற விளையாட்டுகளின் மூலமாகவோ (மரித்த ஆவிகளை ஒரு போர்டில் எழுதும்படித் தூண்டி விளையாடுவது) அல்லது நட்சத்திர பலன் பார்த்தல், ஜாதகம் பார்த்தல், கைரேகை பார்த்தல் அல்லது ராக்-மியூசிக் அல்லது போதை மருந்துகளின் மூலமாகவோ அவன் நேரடியாக வந்து ஜனங்களை வழிதப்பிப் போகச் செய்கிறான்!! இவ்வாறு சாத்தான் ஏதாவதொரு வழியைக் கையாண்டு ஜனங்களின் மனதிற்குள் பிரவேசித்துவிட முயற்சிக்கிறான்.*

*விக்கிரக ஆராதனை, ஜனங்களை சாத்தானோடு நேரடிதொடர்பு*

கொள்ளவே செய்கிறது. ஏனெனில் எந்த விக்கிரகத்திற்குப் பின்பாகவும் ஒரு பிசாசு இருக்கிறது! அந்த விக்கிரகம் "குழந்தை இயேசு" என்றோ "மரியாள்" என்றோ அல்லது இதுபோன்ற எந்த பெயர் சூட்டப்பட்ட விக்கிரகமாக இருந்தாலும், அவை யாவற்றிற்குப் பின்பாகவும் பிசாசு இருக்கிறது!! (1கொரி10:19,20). இதனிமித்தமே தேவன் விக்கிரக ஆராதனையை அருவருக்கிறார். அவைகளிலிருந்து நாம் முற்றிலும் விலகி நிற்க வேண்டும் எனவும் புத்தி சொல்கிறார் (யாத்.20:4, 5; 1கொரிந்தியர்.10:14; 1யோவான் 5:21).

இன்னுமாக சாத்தான் **சினிமா, டெலிவிஷன் நிகழ்ச்சிகள், வீடியோ காட்சிகள்** போன்றவைகளின் மூலமாக இளைஞர்களுக்கு கெட்ட சிந்தையைத் தந்து அவர்களின் மனதைக் கறைப்படுத்திவிடுகிறான்.

***நீங்கள் திரையில் கண்ட 'செக்ஸ்' மற்றும் 'திகில்' காட்சிகளின் அடிப்படையில் உங்களுக்கு கெட்ட கனவுகள் தோன்றுகிறதல்லவா? பாலியத்திற்குரிய அசுத்தமான கனவுகளால் அநேகர் இதனிமித்தம் கெடுவது போலவே, பயப்படும் கனவுகளாலும் அநேகர் கெடுகிறார்கள்!***

இவ்வாறு சாத்தான் உங்கள் மனதிற்குள் "பயப்படும் பீதியின்" மூலமாகவோ அல்லது ஒழுக்கக்கேடான அசுத்தத்தின் மூலமாகவோ உங்கள் மனதிற்குள் எப்படியாவது ஊடுருவி வந்துவிடுகிறான். அவன் உள்ளே பிரவேசித்து விட்டால் போதும்.... பின்பு உங்கள் முழு வாழ்க்கையையும் அவன் கொஞ்சம் கொஞ்சமாய் அழித்துவிடுவான்.

தான் அந்த மரத்திற்கு நேராய் ஈர்க்கப்பட்டதை உணர்ந்தவுடன், ஏவாள் தேவனிடம் உதவிக்காக கூக்குரலிட்டிருந்தால் ஏதேன் தோட்டத்து சரித்திரமே மாறியிருந்திருக்கும்! நான் என்னுடைய 19-வது வயதில் ஓர் கிறிஸ்தவனாய் மாறிய பின்புதான், அன்றிலிருந்து சினிமாவுக்கு போகக்கூடாது என நான் உணர்த்தப்பட்டேன். ஆனால், ஒருநாள் நான் கப்பற்படையில் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் போது, என்னுடைய நண்பர்கள் அவர்களோடு சேர்ந்து சினிமா பார்ப்பதற்கு என்னை தியேட்டருக்கு அழைத்தார்கள். நான் அவர்களிடம், "நான் கிறிஸ்தவனாகிவிட்டபடியால் சினிமா பார்க்க என்னால் வரமுடியாது" எனக் கூறுவதற்கு அச்சமயத்தில் பெலனற்றவனாய் இருப்பதைக் கண்டேன். இந்த நிலையில் அவர்களோடு சேர்ந்து சினிமா தியேட்டருக்கு நடந்துச் சென்றேன். ஆனால் வழி நெடுகிலும் "ஆண்டவரே! தயவுசெய்து எனக்கு உதவி செய்யுங்கள். இந்த சூழ்நிலையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். எனக்கு சினிமா பார்க்க கொஞ்சம்கூட இஷ்டமில்லை!" என என் மனதிற்குள் அமைதியாக ஜெபித்துக் கொண்டே சென்றேன். முடிவில் நாங்கள் சினிமா தியேட்டருக்கு வந்தவுடன், அங்கே ஒரு அறிவிப்பு எழுதிவைக்கப் பட்டிருந்தது, "இன்றைய சினிமாவின் பிலிம் வராத காரணத்தால்,

இன்றைய காட்சி ரத்து செய்யப்பட்டது!" என்பதே அந்த அறிவிப்பாகும். இவ்வளவு அற்புதமாய் தேவன் என் ஜெபத்திற்கு பதில் தந்ததற்காக நான் அவரை துதித்தேன். ஆனால் அவ்வேளையில் ஆண்டவர் என்னிடம், "இந்த தடவை நான் உனக்கு உதவி செய்து விட்டேன். ஆனால் இதுபோன்ற அடுத்த சந்தர்ப்பத்தில் நீதான் 'முடியாது!' என சொல்ல வேண்டும்" என பேசினார். முன் நடந்தது போலவே இன்னொரு சமயத்தில், சினிமாவுக்கு அழைக்கும்படி என் நண்பர்கள் என்னிடம் வந்தார்கள்!! தேவன் என்னுடைய ஜெபத்திற்கு அற்புதமாக பதில் தந்ததினிமித்தம் உற்சாகம் கொண்டிருந்த நான், அவர்களிடம் "முடியாது!" எனக்கூறுவது எனக்கு மிகவும் எளிதாக இருந்தது.

தேவன் ஏதேன் தோட்டத்திற்கு வந்து, ஆதாம்-ஏவாளுடைய பாவங்களை அவர்களுக்கு முன் எடுத்து வைத்து, கடிந்து கொண்ட வேளையில் சாத்தானையும் அவர் பார்த்து, "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என சபித்தார் (ஆதி.3:15). இவ்வாறு தேவன் சொன்ன நிகழ்ச்சி, கல்வாரியில் நிறைவேறிற்று. ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்த இயேசுகிறிஸ்து கல்வாரியில் சாத்தானுடைய தலையை நசுக்கினார்! சாத்தானோ அவருடைய குதிங்காலை நசுக்கும்படி இயேசுவின் பாதங்களை ஆணிகளால் அறைந்தான். இவ்வாறாக, நாம் வாசிக்கும் ஆதியாகமம் 3-ம் அதிகாரம் "**இனியும் சாத்தான், மனிதன் மீது எந்நாளும் ஆளுகை கொண்டிருக்க முடியாது**" என்ற நம்பிக்கையின் செய்தியோடு முடிவடைகிறது. இயேசு இப்பூமிக்கு வந்து, இவ்வாறு சாத்தானை தோற்கடித்தபடியால், இப்போது எல்லா மனிதர்களையும் சாத்தானின் வல்லமையிலிருந்து அவர்களை விடுவிப்பது அவருக்கு சாத்தியமாயிருக்கிறது.

இனியும் சாத்தான் உங்கள் ஜீவியத்தின் மீது எவ்வித வல்லமையும் கொண்டிருக்கத் தேவையே இல்லை. "இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்த வேளையில், உங்கள் மீது சாத்தான் கொண்டிருந்த அவனுடைய முழு வல்லமையையும் இயேசு தோற்கடித்துவிட்டார்" என்பதை நீங்கள் விசுவாசித்தால், கடினமாகிவிட்ட உங்கள் மனசாட்சி மீண்டுமாய் ஒரு கைக்குழந்தையின் பாதங்களுக்கு ஒப்பாய் அதிக உணர்வுடையதாய் மாறிவிட முடியும்.

சாத்தானை "குற்றம் சாட்டுகிறவன்" என வேதாகமம் அழைக்கிறது (வெளி.12:10). உங்கள் பாவங்களை நீங்கள் தேவனிடம் சென்று 100 தடவைகள்கூட அறிக்கை செய்துவிட்டிருந்தாலும்.... இன்னமும், சாத்தான் உங்கள் கடந்த கால தோல்விகளையும், பாவங்களையும் இடைவிடாது குற்றம்சாட்டிக் கொண்டேதான் இருப்பான். சாத்தானுடைய குற்றச்சாட்டுகளை ஜெயிப்பதற்கு ஒரே வழி: உங்கள் எல்லாப் பாவங்களையும் தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்து,

*தேவன் தம்முடைய* **வாக்குதத்தத்தை** *நிறைவேற்றுவார் என விசுவாசிப்பதேயாகும். ஆம், அவர் நமக்குத் தந்த வாக்குத்தத்தம் யாதெனில், "கல்வாரி சிலுவையில் இயேசு சிந்திய இரத்தம், உங்கள்* **எல்லாப் பாவங்களையும்** *நீக்கி சுத்திகரிக்கும்" என்பதேயாகும் (1யோவா.1:7,9). தேவனுடைய பிள்ளைகளை அலைகழிப்பதற்கு "குற்றம் சாட்டுதலை" சாத்தான் பிரதான ஆயுதமாகவே பயன் படுத்துகிறான். இச்சமயங்களில் அவனை ஜெயிப்பதற்கு, நீங்கள்* **தேவனுடைய வார்த்தைகளை** *நன்கு அறிந்தவர்களாய் இருக்க வேண்டும்.*

*இன்று ஓர் உண்மையை அறிந்து கொள்ளுங்கள்: நீங்கள் தேவனிடம் உங்கள் பாவங்களை 'இரண்டு தடவைகூட' அறிக்கை செய்ய வேண்டியது அவசியமில்லை. "ஒரே ஒரு தடவை" மாத்திரமே உங்கள் பாவங்களை அறிக்கைச் செய்தாலும், உங்களை* **உடனடியாக மன்னிப்பதற்கு** *தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். நீங்கள் இவ்வாறாகத்தான் சாத்தானை இப்போது ஜெயிக்க முடியும்... அதாவது, "என்னுடைய கடந்தகால எல்லாப் பாவங்களும் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் கழுவப்பட்டுவிட்டது" என சாத்தானுக்கு முன்பான உங்கள் தைரியமான அறிக்கை, சாத்தானை ஜெயித்துவிடும் (வெளி.12:11). இதில் ஒருதுளியும் சந்தேகமில்லை!!*

*உங்கள் பாவங்களை மன்னிப்பதற்காக மாத்திரம் இயேசு மரிக்காமல், அநேக தீய பழக்கங்களில் உங்களை அடிமைக்கு உள்ளாக்கியிருக்கும்* **சாத்தானின் வல்லமையிலிருந்து** *உங்களை விடுவிப்பதற்காகவும் இயேசு கல்வாரியில் மரித்தார். உங்கள் இரட்சகர் மூலமாய் சாத்தானுடைய தலை முற்றிலுமாய் நசுக்கப்பட்டுவிட்டது என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்! அல்லேலூயா!!*

# 4

## சாத்தானை தேவன் ஏன் அழிக்கவில்லை?

*மனுஷனை ஒரு மிருகத்திற்கு ஒப்பான நிலைக்குத் தரங்குறையச் செய்வது எது?*

*தன்னுடைய சரீரத் தேவைகளும், இப்பூமியில் பிழைத்து வாழும் வாழ்க்கையுமே பிரதான ஆர்வமாய் மாறும்போது இம்மிருகத்தின் நிலைக்கு மனுஷன் தேய்வடைகிறான்! ஒரு மிருகம் எவைகளைக் குறித்து ஆர்வமாய் இருக்கும்? உணவு, உறக்கம், காமதிருப்தி.... அவ்வளவுதான்! இவைகளில் மாத்திரமே ஓர் மானிடனும் ஆர்வம் கொண்டிருந்தால், அவனும் மிருகங்களின் தரத்திற்கு இறங்கி வந்துவிட்டான் என்றே நாம் சொல்லலாம். ஆனால், மனிதன் மிருகங்களைப் போல் இருப்பதற்காக தேவன் அவனை சிருஷ்டிக்க வில்லை. "கல்வி" மாத்திரமே ஒரு மனிதனை மிருகங்களைக் காட்டிலும் மேலான நிலைக்கு கொண்டுவர முடிவதில்லை. ஏனெனில் புத்தி கூர்மையாக கல்வி கற்ற மனிதர்கள்கூட அநேக சமயங்களில் மிருகங்களுக்கு ஒப்பாகவே நடந்து கொள்கிறார்கள்!*



***நம் மனதைக் (MIND) காட்டிலும் ஆழமான ஓர் பகுதி நம்மில் அடங்கியிருக்கிறது.... அது நமக்குள் இருக்கும் ஆவியேயாகும். நம்முடைய 'ஆவியே' (SPIRIT) தேவனைக் குறித்த உணர்வை நமக்குத் தருகிறது!***

தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது **"ஓர் தெரிந்து கொள்ளும் சுயாதீனம்"** உடையவனாகவே அவனைப் படைத்தார். அதாவது, மனுஷன் தான் எதை விரும்புகிறானோ அதைச் செய்யும்படியான சுதந்திரத்தை தேவன் அவனுக்குத் தந்திருக்கிறார்.

ஓர் தேவதூதனாக சாத்தான் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவனுக்கும் இவ்வித தெரிந்து கொள்ளும் சுதந்திரத்தை தேவன் கொடுத்திருந்தார். ஆகவேதான், "நான் தேவனுடைய சிங்காசனத்திற்கு மேலாக ஏறுவேன்!" என அவனால் சுயாதீனத்துடன் கூற முடிந்தது.

ஆனால் இவ்வித "தெரிந்து கொள்ளும் சுயாதீனம் இல்லாத" ஏராளமான படைப்புகளையும் தேவன் சிருஷ்டித்திருந்தார். நட்சத்திரங்களும், கிரகங்களும் இதற்கு உதாரணங்களாகும். சூரிய மண்டலத்தில் நாம் காணும் கிரகங்கள் பல்லாயிரம் ஆண்டுகாலமாக தேவன் நியமித்திருக்கும் நியமனத்துக்கு விரோதமாக ஒரு தடவைகூட முரட்டாட்டம் செய்ததே இல்லை. ஏன்? ஏனென்றால் அவைகளுக்கு தெரிந்து கொள்ளும் சுயாதீனம் இல்லை! ஆனால், "முரட்டாட்டம் செய்ததில்லை" என்பதற்காக, இந்த 'கிரகங்கள்' தேவனுடைய பிள்ளை களாய் மாறிவிட முடியாது! ஒருவன் தேவனுடைய பிள்ளையாக வேண்டுமென்றால், அவன் விரும்புவது எதுவோ அதை அவனாகவே தெரிந்து கொள்ளும் "ஓர் தெரிந்துகொள்ளும் சுயாதீனம் கொண்டவனாய்" சிருஷ்டிக்கப்பட வேண்டும்.

***ஆனால் இவ்வித தெரிந்து கொள்ளும் சுயாதீனத்தைப் பெறுவதில் அடங்கியிருக்கும் அபாயம் யாதெனில், இந்த சுயாதீனத்தை நீங்கள் துஷ்பிரயோகம் செய்து, தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படியாதிருக்க பயன்படுத்த முடியும்!***

இவ்வாறு இருந்தும், தேவன் இந்த அபாயத்தை எதிர்கொள்ள ஆயத்தமாயிருந்தார் ... ஏனென்றால், தனக்கு கீழ்ப்படிதலுள்ள **பிள்ளைகளையே** அவர் விரும்புகிறார்! இங்குதான், தேவனுடைய திட்டத்தில் சாத்தானும் தன் பணியை நிறைவேற்றுகிறவனாய் வருகிறான்.

இன்று உலகில் நாம் காணும் எல்லா தாறுமாறுகளும், குழப்பங்களும், வியாதிகளும், ஏதேன் தோட்டத்தில் மனிதன் பிசாசுக்கு செவிகொடுத்து தேவனுக்கு கீழ்ப்படியாததின் நேரடி விளைவேயாகும்.

இத்தருணத்தில், "இவ்வுலகத்தின் எல்லா தீமைகளுக்கும் சாத்தான் தான் காரணமென்றால், சாத்தானை ஏன் தேவன் இன்னமும் அழிக்காமல் வைத்திருக்கிறார்?" என்ற கேள்வியை நாம் கேட்கக்கூடும். இந்த கேள்வி ஒருபுறம் இருந்தாலும் "நம்முடைய ஞானத்தைவிட தேவனுடைய ஞானம் மிகப் பெரியது!" என்ற உண்மையையாவது நாம் யாவரும் விசுவாசிக்க முடியும் என நான் நம்புகின்றேன். நம்முடைய ஞானம், ஒரு கோப்பையில் உள்ள தண்ணீர் அளவுக்கு ஒப்பாக

*இருக்கிறது. தேவனுடைய ஞானமோ, பரந்து விரிந்திருக்கும் சமுத்திரத்திற்கு ஒப்பாக இருக்கிறது!*

*ஆகவே சாத்தானை அழிக்காமல், அவன் இவ்வுலகில் தீவிரமாய் கிரியைச் செய்வதற்கு தேவன் அனுமதித்திருப்பாரென்றால், அதன் பின்னணியில் ஏதோ ஒரு நல்ல காரணம் கண்டிப்பாக இருக்கும் என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ளலாம். ஆம், உண்மையிலேயே தேவன் சாத்தானுடைய கிரியையின் மூலமாய் எண்ணற்ற காரியங் களைச் செய்து முடிக்கிறார். இதனிமித்தமே அவன் இன்னமும் இருப்பதற்கு தேவன் அனுமதித்திருக்கிறார்! இவ்வாறு சாத்தான் ஏராளமான தீமைகளையும், பாதிப்புகளையும், துன்பங்களையும் இவ்வுலகில் ஏற்படுத்திட தேவன் அனுமதிப்பதற்கு மிக முக்கியமான தோர் காரணம்: "இவைகளின் மூலமாய் ஜனங்கள் தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டும்!" என்பதற்காகவேயாகும்.*

***இதற்கு நேர்மாறாக, இப்பூமியில் உள்ள வாழ்க்கை மிகுந்த சௌகரியம் உள்ளதாய், வியாதியோ, துன்பமோ, வறுமையோ, பாடுகளோ இல்லாதிருந்தால்.... இவ்வுலகில் ஒருவர்கூட தேவனை சிந்திக்கக்கூட மாட்டார்கள்!***

*ஆகவே நம்முடைய வாழ்வில் தேவன் அனுமதித்திருக்கும் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவேயாகும். பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் தேவனை மறந்த போது, அவர்களை விஷப்பாம்புகள் கடித்தன என நாம் வாசிக்கிறோம்! அவ்வேளையில் ஜனங்கள் 'உடனடியாக' தேவனிடம் திரும்பினார்கள். தேவனும் அவர்களை சுகமாக்கினார் (எண்ணாகமம்.2:1). இவ்வாறு, விஷப்பாம்புகள் ஜனங்களை தேவனிடம் திரும்பச் செய்தது மகா மேன்மையான செயல் அல்லவா!*

*தேவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்த ஒரு வியாபாரியைக் குறித்த நிகழ்ச்சியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த வியாபாரியின்* **வியாபாரம் செழித்தவுடன், அவர் தேவனைவிட்டு** *தூரமாகி விலகிச் சென்றுவிட்டார். சபையில் உள்ள மூப்பர்கள் அவரை மீண்டும் தேவனிடத்தில் கொண்டுவரும் பொருட்டு தொடர்ச்சியாய் அவருடன் தொடர்பு கொண்டு புத்தி சொன்னார்கள். ஆனால் அந்த வியாபாரியோ தன்னுடைய வியாபாரத்தில் மூழ்கிப் போய்விட்டார்! ஒருநாள், அந்த வியாபாரியின் மூன்று குமாரர்களில், கடைசி இளைய குமாரனை ஒரு விஷப்பாம்பு கடித்தபடியால், அந்தப் பிள்ளை மரணதருவாய்க்கு வந்துவிட்டான். மருத்துவர்களும் எல்லா நம்பிக்கை யையும் இழந்து அவனை கைவிட்டுவிட்டார்கள். இச்சூழ்நிலையில் வியாபாரியான அந்த தகப்பன் மிகுந்த சஞ்சலமடைந்தவராய், தன் பிள்ளைக்காக ஜெபிக்கும்படி சபையில் உள்ள ஒரு மூப்பரை அழைத்தார். அவ்வாறு அழைக்கப்பட்ட அந்த மூப்பர் மிகுந்த*

ஞானமுள்ள மனிதர்! அவர் அப்பையனுக்காக ஜெபிக்கத் தொடங்கி, “தேவரீர், நீர் இந்தப் பிள்ளையைக் கடிக்கும்படி ஒரு பாம்பை அனுப்பியதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்! ஏனெனில், இந்தக் குடும்பம் உம்மைத் தேடும்படி நான் எடுத்துக்கொண்ட எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இவ்வாறு கடந்த ஆறு வருடங்களாய் நான் செய்ய முடியாததை இந்தப் பாம்பு ஒரு நொடிப்பொழுதில் செய்து முடித்து விட்டது! இப்போதும் கர்த்தாவே, இவர்கள் இந்தப் பாடத்தை இப்போது கற்றுக்கொண்டார்கள்! இயேசுவின் நாமத்தில் தயவுகூர்ந்து இந்தப் பிள்ளையை சுகமாக்கும். இனியும் இவர்கள் உம்மை நினைவுகூருவதற்கு எந்த ஒரு பாம்பும் வரும் நிலை ஏற்படாதிருக்க அருள் செய்யும்!” என ஜெபித்து முடித்தார்.

இவ்வாறு, புற்றுநோயினாலோ அல்லது வேறு எந்த கொடிய நோயினாலோ திடீரென்று பாதிக்கப்பட்டு மருத்துவமனை செல்லும் வரை தேவனைத் தேடாத ஜனங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! இதுபோன்ற இக்கட்டான நிலையில் இவர்கள் ‘உடனே’ தேவனிடம் திரும்பி வந்து தங்களுடைய இரட்சிப்பிற்காக மன்றாடத் துவங்கி விடுகிறார்கள். எனவே சுகமாக்க முடியாத வியாதிகள், சுகவீனங்கள், வறுமைகள் இன்னும் இதுபோன்று உலகத்தில் நாம் காணும் தீமைகளை தேவன் உபயோகித்து, அதன் மூலம் ஜனங்களை அவர்களின் பாவங்களிலிருந்து திரும்பும்படிச் செய்கிறார். முடிவில், ஜனங்கள் பரலோகத்தில் உள்ள தங்கள் நித்திய வீட்டைக் கண்டு கொள்ளும்படி அவர்களை தேவன் நடத்துகிறார். பார்த்தீர்களா, **சாத்தான் கொண்டுவரும் எல்லா தீமைகளையும் தேவன் உபயோகித்து** அதன் மூலம் ஜனங்களை சாத்தான் பிடியிலிருந்து விடுதலையாக்கி, தனது நித்திய இரட்சிப்பிற்குள் அவர்களை நடத்திவிடுகிறார். இவ்விதமாய், சாத்தானை திரும்ப திரும்ப ஒரு ‘முட்டாளாகவே’ நிற்க வைத்து விடுகிறார்!

***மேலும், தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மை “சுத்திகரிப்பதற்கென்றும்” சாத்தானை தேவன் பயன்படுத்துகிறார்.***

அக்கினி அல்லது **நெருப்பைக்** குறித்து சற்று எண்ணிப்பாருங்கள். உலக சரித்திரத்தில் இலட்சக்கணக்கான ஜனங்கள் நெருப்பினால் மாண்டுபோய் இருக்கிறார்கள் என நாம் அறிந்திருக்கிறோம். இருப்பினும், இந்தக் காரணத்திற்காக ஒருவராகிலும் நெருப்பை உபயோகிப்பதை நிறுத்திவிடவில்லை! ஏன்? ஏனென்றால், நெருப்பு மூலமாகத்தான் உணவு சமைக்கப்படுகிறது! வாகனங்களும், விமானங்களும், இயந்திரங்களும் ஓடுகின்றன!! தங்கம்கூட நெருப்பு மூலமாகவே சுத்திகரிக்கப்படுகிறது!! எனவே, நெருப்பு ஊறு விளைவிக்கக்கூடிய அபாயம் நிறைந்ததாய் இருந்தபோதும், எத்தனையோ நன்மையான செயல்களுக்கும் நெருப்பு மிகவும் உபயோகமாயிருக்கிறது.

இதேபோல, மின்சாரத்தைப் பற்றி சற்று எண்ணிப்பாருங்கள்! மின் விபத்தினால் எத்தனையோ மில்லியன் ஜனங்கள் மரித்துப் போயிருக்கிறார்கள். ஆம், மின்சாரம் உண்மையிலேயே அபாயம் நிறைந்ததுதான்! ஆகிலும், எத்தனையோ நன்மையான காரியங்களுக்கு மின்சாரத்தின் சேவை போற்றுவதற்கு உரியதாயிருக்கிறது என்பதை நாம் யாவரும் அறிவோம். இப்படித்தான் 'சாத்தானும்' இருக்கிறான்!!

ஆதாமும், ஏவாளும் சிருஷ்டிக்கப்பட்டபோது களங்கமற்ற வர்களாகவே இருந்தார்கள். அவர்கள் பரிசுத்தம் அடைவதற்கு, அவர்கள் பெற்றிருந்த "தெரிந்து கொள்ளும் இந்த சுயாதீனம்" சோதிக்கப்பட வேண்டும். இந்த நிலையில்தான் அவர்கள் தீமையை வெறுத்து, அதற்கு பதிலாய் தேவனைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டுகிறது. இவ்வாறாக, அவர்கள் எதைத் தெரிந்துகொள்ளப் போகிறார்கள்? என்பதை அறிவதற்கென்றே அவர்கள் சோதிக்கப்பட வேண்டும்! இவர்கள் தீமையை மறுத்துவிடுவார்களா? அல்லது தேவனை உதாசீனம் செய்து தீமைக்கு உடன்படுவார்களா? என்பதை சோதனை நேரமே அம்பலப்படுத்துகிறது. இதற்காகத்தான், சாத்தானை ஏதேன் தோட்டத்திற்குள் அனுமதித்து அவர்களை அவன் சோதிக்கும் படி தேவன் செய்தார்.

ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தானை பிரவேசிக்கவிடாமல் தடைசெய்வது, தேவனுக்கு ஓர் கடினமான செயல் என்று எண்ணுகிறீர்களா? அப்படி அல்லவே அல்ல!

> ***ஆனால் உண்மை யாதெனில், சோதனையில்லாமல் ஆதாம் பரிசுத்தமாகிட ஒருக்காலும் முடியாது! சோதனையில்லா திருந்தால், அவன் தொடர்ந்து ஓர் பேதையான களங்கமற்ற தன்மையிலேயே இருந்திருப்பான்!***

பேதைமையான களங்கமற்ற தன்மைக்கும், பரிசுத்தத்திற்கும் இடையே ஏராளமான வித்தியாசம் உள்ளது. நாம் ஒரு குழந்தையிடம் காண்பதே பேதைமையான களங்கமற்ற தன்மையாகும். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது அவன் எவ்வாறு இருந்தான் என்பதை நீங்கள் அறிய விரும்பினால், ஒரு குழந்தையை கவனித்துப் பார்த்து, அக்குழந்தையைப் போலத்தான் ஆதாம் இருந்தான் என நீங்கள் அறிந்து கொள்ளலாம். ஆம், குழந்தை களங்கமற்றதும் நன்மை தீமை இன்னதென்று தெரியாத "அறியாமை" கொண்டதுமாகும்!

ஒரு சிறு குழந்தை களங்கமற்றதாய் இருந்தாலும் அது இன்னமும் பரிசுத்தமாகவில்லை! பூரணமடையவுமில்லை! பூரணமாக வேண்டு மென்றால், அக்குழந்தை வளர்ச்சியடைந்து தான் விரும்பியதைத் தானாகவே தெரிந்து கொள்ளும் சுயாதீன நிலைக்கு வரவேண்டும். மேலும், இந்த நிலையில் தீமையை மறுத்து தேவனை தெரிந்து கொள்ள வேண்டும்! அப்போதுதான் பரிசுத்தமாகுதல் அப்பிள்ளைக்கு கிட்டும்!!

இவ்வாறு நம் மனதில் தோன்றும் சோதனைகளுக்கு நாம் இணங்க மறுக்கும்போதுதான், நம்மில் நற்பண்புகளாகிய குணாதிசயம் உருவாகிறது. இதுவரை நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையில், நீங்களாகவே **எதைத் தெரிந்துகொண்டீர்களோ அந்த அளவின்படிதான்** இன்றைய உங்கள் குணாதிசய நிலை இருக்கிறது!

உங்களைக் காட்டிலும், மற்றவர்கள் தங்கள் குணாதிசயத்தில் (நற்குணத்தில்) மேம்பட்டிருந்தால், அதற்கு காரணம், அவர்கள் தங்கள் ஜீவியத்தில் நீங்கள் தெரிந்துகொண்டதைவிட "சிறந்தவைகளைத் தெரிந்து கொண்டார்கள்" என்பதேயாகும்.

> ***இவ்வாறு, ஒவ்வொரு நாளும் நம் எல்லோருக்கும் நமக்கென தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிட்டுகிறது. நம்முடைய தெரிந்துகொள்ளுதலை வைத்துதான் நாம் முடிவில் எவ்வித வளர்ச்சியடைகிறோம் என்பது நிர்ணயிக்கப்படுகிறது.***

ஏதேன் தோட்டத்தில், ஏவாள் ஒன்றை தெரிந்து கொண்டாள்! தன்னுடைய தெரிந்து கொள்ளுதலின் மூலம் ஏவாள் அறிக்கை செய்தது யாதெனில், "தேவன் எனக்கு கட்டளையிட்டிருக்கும் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருப்பதைவிட, சாத்தான் எனக்கு வழங்குவதை ஏற்றுக்கொண்டு என் சரீர ஆசைகளைப் பூர்த்தி செய்யவே விரும்புகிறேன்! எனக்கு இவ்வித சுதந்திரமே வேண்டும்!!" என்பதேயாகும்.

ஆனால், மெய்யாகவே அவள் விரும்பிய சுதந்திரம் அவளுக்கு கிட்டியதா? இல்லை! அவள் சாத்தானுக்கு ஓர் அடிமையாகவே மாறினாள்!! தேவனுடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்படிவது ஒன்றே நம்மை மெய்யான விடுதலையின் சுதந்திரத்திற்குள் நடத்திட முடியும்.

அந்நாளில், ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் ஓர் மிக மிக முக்கியமான தீர்மானத்தை எடுத்தார்கள். **அந்த தீர்மானமே** அவர்களுக்கும், அவர்களுடைய சந்ததிக்கும் காலாகாலமான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது! இவ்விதமாய், எல்லா தீர்மானங்களும் பின்விளைவுகளை ஏற்படுத்துவதாய் இருக்கிறது. சில சமயங்களில் இந்த பின் விளைவுகள் துரதிருஷ்டவசமாய் நமது பிள்ளைகளையும் பாதித்துவிடுகிறது. இங்கே ஆதாம் விஷயத்தில் அவனுக்கும், அவனுடைய மனைவிக்கும் ஏற்பட்ட உடனடி விளைவு, அவர்களுடைய ஜீவகாலமெல்லாம் தேவனுடைய சமூகத்திலிருந்து துரத்தப்பட்டார்கள்!

ஆகவே, **உங்களுடைய சிறு சிறு தெரிந்து கொள்ளுதல்கள்** அவ்வளவு முக்கியமல்லவென்றோ அல்லது இன்று நீங்கள் விதைப்பவைகளுக்கு யாதொரு அறுவடையும் இருக்காது என்றோ நீங்களாக எண்ணிக்கொள்ள வேண்டாம்! நீங்கள் பரீட்சிக்கப்படுவதற்கும், சோதிக்கப்படுவதற்கும் தேவன் நிச்சயமாய் அனுமதிப்பார். இந்த தன்னுடைய நோக்கத்திற்காகத்தான், இவ்வுலகில் சாத்தானுக்கு தேவன்

*சுதந்திரத்தைக் கொடுத்து, அவன் சுறுசுறுப்புடன் செயல்படுவதற்கு அனுமதித்திருக்கிறார்.*

*பழைய ஏற்பாட்டின் யோபு புத்தகத்திலிருந்து ஒரு உதாரணத்தை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். யோபுவின் அனுபவத்திலிருந்து,* **சாத்தானுடைய செயல்பாடுகளை** *சற்றே நாம் கற்றுக்கொள்ள முடியும். பரலோகத்தில், தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் ஓர் சம்பாஷணை நடந்ததாக யோபு 1-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்.*

*யோபு 1:6-ம் வசனத்தில், "ஒரு நாளில் தேவபுத்திரர் (தேவதூதர்கள்) கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்களோடு சேர்ந்து அவர்கள் நடுவில் வந்து நின்றான்" என வாசிக்கிறோம். அப்போது தேவன் சாத்தானைப் பார்த்து, "நீ எங்கிருந்து வருகிறாய்?" என கேட்டார். அதற்கு சாத்தான் சொன்ன பதிலை சற்று கவனித்துப் பாருங்கள். சாத்தான் கர்த்தருக்கு பிரதியுத்தரமாக, "நான் பூமியெங்கும் உலாவி அதில் சுற்றித்திரிந்து வருகிறேன்" எனக் கூறினான். ஆம், சாத்தான் இவ்வுலகின் எல்லாப் பகுதியிலும் சுற்றித்திரிந்து வருகிறான் என்ற உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?*

*இன்று அநேக ஜனங்கள் "சாத்தான் நரகத்தில்" வாழ்கிறான் என்றே கருதுகிறார்கள். அவ்விதமான கருத்து உண்மையானதாக இருந்தால், பூமியில் இருக்கும் நமக்கு சாத்தான் இடையூறு செய்வது சாத்திய மற்றதாயிருக்கும்!*

*ஆனால் சாத்தானோ நரகத்தில் ஜீவித்து கொண்டிருக்கவில்லை! வேதாகமம் "மூன்று வானங்கள்" இருப்பதாகவே நமக்கு போதிக்கிறது. "விண்வெளியென" நாம் அழைப்பதே இந்த முதலாம் வானம் ஆகும். "தேவனுடைய நேரடி பிரசன்னமே" மூன்றாம் வானமாயிருக்கிறது (2கொரி.12:2). இந்த தேவனுடைய நேரடி பிரசன்னத்திலிருந்து சாத்தான் தள்ளப்பட்டபோது, மூன்றாம் வானத்திலிருந்து இரண்டாம் வானத்திற்கு வீழ்ச்சியடைந்தான் (எபேசியர்.6:12).*

***ஆம், சாத்தான் நரகத்திற்குள் தள்ளப்படவில்லை! இந்த இரண்டாம் வானத்திலிருந்து கொண்டு, அவன் எச்சமயத்திலும் பூமிக்கு வருவதற்கு சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறான்.***

*இதனிமித்தமே, அவனால் ஏதேன் தோட்டத்திற்கும் வரமுடிந்தது. எனவேதான், அவனும் அவனோடு சேர்ந்த பிசாசுகளும் இன்றுகூட பூமிக்கு வந்திட முடிகிறது.*

*சாத்தான் 'கெர்ச்சிக்கிற சிங்கம்போல' எவனை விழுங்கலா மென்று வகைதேடி சுற்றித்திரிகிறான் என்று வேதாகமம் கூறுகிறது. குறிப்பாக வாலிபர்களை சோதனைக்குத் தூண்டி தவறானவற்றை தெரிந்து கொள்வதற்கு அவன் சதா முயற்சித்துக் கொண்டே*

*யிருக்கிறான். அவன் எப்படியாவது வாலிபர்களின் ஜீவியத்திற்குள் பிரவேசித்து அதன்மூலம் அவர்களுடைய தூய்மையையும், நேர்மை யையும், உண்மையையும் கொள்ளையிட்டு, அதன்மூலம் அவர்களின் நற்பண்புகளை அழித்து... முடிவில், அவர்களைத் தன்னோடுகூட நித்திய ஆக்கினைக்குள் நடத்திட விரும்புகிறான். இவ்வித தன்னுடைய செயலை நிறைவேற்றுவதற்காகவே சாத்தான் இப்பூமியில் சுற்றி வந்துகொண்டிருக்கிறான்.*

*ஆகவே, இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரையும் சாத்தான் கண்காணித்து வருகிறான் என்ற உண்மையை, நீங்கள் ஏற்றுக் கொண்டிட உங்களுக்குக் கடினமாக இருக்காதென நான் நம்புகிறேன். உங்களுடைய சிறுபிராயத்திலிருந்தே அவன் உங்களை கண்காணித்து, எல்லா சமயங்களிலும் தீமை செய்வதற்கு உங்களைத் தூண்டி, முடிவில் உங்களை அழித்துவிட துடிப்புடன் இருக்கிறான்! உங்கள் பள்ளி அல்லது கல்லூரி பரீட்சைகளில் ஏமாற்றுவதற்கும், பிறரிடம் மனக்கசப்பு கொள்வதற்கும், பெற்றோர்களிடமோ, ஆசிரியர்களிடமோ பொய் சொல்வதற்கும், பிறருடைய பொருட்களை திருடுவதற்கும், அருவருப்பான புத்தகங்களை வாசிப்பதற்கும்... இந்த சாத்தானே, உங்கள் காதுகளில் ஒவ்வொரு நாளும் வந்து ஓதுகிறான்!*

*யோபு 1-ம் அதிகாரத்தில் நாம் மேலும் வாசிப்பது யாதெனில், தேவன் சாத்தானைப் பார்த்து, "என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ? தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிற வனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை" எனக் கூறினார்.* **ஆம், சாத்தானுக்கு யோபுவைப்பற்றிய எல்லா விஷயங்களும் தெரியும்.** *சொல்லப்போனால், அவனுடைய "தாக்குதல் பட்டியலில்"* (Hit-list) *யோபுதான் முதலாவதாக இருந்தான்!*

*ஆகவேதான் சாத்தான், "யோபு விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கிறான்? நீர் அவனையும், அவன் வீட்டையும் அவனுக்குரிய எல்லாவற்றையும் சுற்றி வேலி அடைக்கவில்லையோ?... ஆகவேதான் அவன் உம்மை சேவிக்கிறான்" (யோபு.1:8-10) என சட்டென்று பதிலுரைத்தான்.*

*இந்த அவனுடைய பதிலிலிருந்து ஓர் அற்புதமான உண்மையை நாம் கற்றுக் கொள்கிறோம். அதாவது, தேவன் தன் பிள்ளைகளைச் சுற்றி வேலியடைத்துப் பாதுகாக்கிறார்! அந்த வேலியை அவர் மூன்று வகையாக வைத்து கிரியை செய்கிறார்: 1) தன்னுடைய பிள்ளைகளின் சரீரத்தை சுற்றி காத்திடும் வேலி 2) குடும்பத்தைச் சுற்றி காத்திடும் வேலி 3) அவர்களுடைய எல்லா உடைமைகளையும் காத்திடும் வேலி!*

*இவ்வாறு தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நமக்கு "திவ்விய பாதுகாப்பு" வழங்கும் இவ்வித மூன்று விதமான வேலியை பெற்றிருப்பது எத்தனை ஆசீர்வாதமான சிலாக்கியம் என்பதை*

*எண்ணிப்பாருங்கள். நீதிமொழிகள்.18:10-ல், "கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்" என நாம் வாசிக்கிறோம். பார்த்தீர்களா, இயேசுவின் நாமத்தில்தான் எத்தனை மகத்துவமான பாதுகாப்பு அடங்கியுள்ளது! வேறு எந்த நாமத்திற்கும் சாத்தான் அஞ்சுவதே இல்லை. ஆனால், கல்வாரியில் அவனை ஜெயித்த இயேசுவின் நாமத்திற்கே சாத்தான் அஞ்சி நடுங்குகிறான்! நம்முடைய ஜீவியத்தை கிறிஸ்துவிடம் சமர்ப்பணம் செய்திருப்போமென்றால், நாமும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை உபயோகித்து சாத்தானை எதிர்த்து நின்றிட முடியும். ஏனெனில், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என வேதம் தெளிவாக கூறுகிறது.*

*நாம் தொடர்ந்து யோபுவின் புத்தகத்தை வாசிக்கும் போது, யோபுவின் சரீரத்தை சாத்தான் வாதிப்பதற்கும், அவன் குடும்பத்தை தாக்குவதற்கும், அவனுடைய சொத்துக்களை நாசமாக்குவதற்கும் அவனை அனுமதித்தார் என காண்கிறோம். இதை வேறுவிதமாய் சொல்வோமென்றால், தேவன் ஒவ்வொரு வேலியாகத் திறந்து, அதன் வழியாய் சாத்தான் பிரவேசித்து, யோபுவை* **சோதிக்கும்படி அனுமதித்தார்.** *இவ்வாறு தேவன் ஏன் செய்தார்? இதன் மூலமாய், யோபு "பொன்னைப் போல சுத்திகரிக்கப்பட்டு" தூய பொன்னாக மாற வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு அனுமதித்தார் (யோபு.23:10).*

***இந்தப் பரீட்சையின் முடிவில், யோபு தன்னிடமிருந்த அதிகமான சுய நீதியினின்றும் கழுவப்பட்டு, அதிக தாழ்மையும், அதிக தேவபக்தியும் நிறைந்தவனாய் மாறினான்! என வாசிக்கிறோம்.***

இந்த நோக்கத்திற்காகவேதான் **நாமும் சோதிக்கப்பட** தேவன் அனுமதிக்கிறார். எனவே இதுபோன்ற சோதனைகளின் மூலமாய் நாம் பரிசுத்தமும், தாழ்மையும், அதிக அன்பும் உள்ளவர்களாயும், அதிக இரக்கம் உள்ளவர்களாயும், சுய நீதியிலிருந்து விடுதலை பெற்று, இயேசுவைப் போலவே அதிக அதிகமாய் மாறும்படிச் செய்கிறார். இவ்வாறு தேவனுடைய பிள்ளைகளை பரிசுத்தப்படுத்தும் உயர்ந்த நோக்கத்திற்கு சாத்தான் பயன்படுவதை நாம் காண்கிறோம்!

*இவை யாவற்றிலிருந்தும் நாம் குறைந்தது இரண்டு காரியங்களை கற்றுக்கொள்கிறோம்:*

*முதலாவதாக,* **தேவனுடைய அனுமதியில்லாமல்,** *அவருடைய எந்த பிள்ளைகளின் சரீரத்தையோ, குடும்பத்தையோ அல்லது அவர்களின் உடைமைகளையோ சாத்தான் ஒருபோதும் ஒருபோதும் தொடவே முடியாது!*

*இரண்டாவதாக, ஏதாவதொரு வகையில் சாத்தான் நம்மைத் தொடுவதற்கு அல்லது தீங்கு செய்வதற்கு அனுமதிக்கும்போது, அதை தேவன் எப்போதும்* **ஓர் உயர்ந்த நோக்கத்திற்காகவே** *செய்கிறார். அதாவது,*

*நம்முடைய நிலையற்ற பூமிக்குரிய காரியங்களிலிருந்து நாம் விடுதலையாகி, அதிகமதிகமாய் பரலோக சிந்தையுள்ளவர்களாய் மாறி, நம் ஜீவியத்தில் கிறிஸ்துவைப்போல் ஓங்கி வளரவேண்டும் என்பதே தேவனுடைய அந்த உயர்ந்த நோக்கமாயிருக்கிறது!*

*சாத்தான் நமக்கு தீங்கு செய்ய முயலும் சம்பவங்களை, நம்முடைய பரமதகப்பன் எவ்வாறு சம்பூரண ஆளுகைச் செய்கிறார் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்வது நமக்கு எத்தனை ஆறுதலாயிருக்கிறது!*

*வாலிப சகோதர சகோதரிகளாகிய உங்கள் யாவரையும் பார்த்து நான் மீண்டுமாய் வலியுறுத்திக் கேட்கிறேன்: "நீங்கள் உங்கள் முழு ஜீவியத்தையும் தேவனுக்கு அர்ப்பணம் செய்துவிடுங்கள்!" இவ்வாறு நீங்கள் செய்து விட்டால் உங்கள் சரீரத்திற்கும், உங்கள் குடும்பத்திற்கும், உங்கள் உடைமைகளுக்கும், நாம் மேற்கண்டபடி மூன்றுவித பாதுகாப்பு வேலியை தேவனிடமிருந்து பெற்றவர்களாய் மாறி விடுவீர்கள். தேவனுடைய அனுமதியில்லாமல், சாத்தான் இந்த வேலிகளின் வழியாய் ஒருக்காலத்தும் கடந்து வர முடியாது! இருப்பினும், சாத்தான் உங்களிடத்தில் வருவதற்கு எப்போதெல்லாம் தேவன் அனுமதிக்கிறாரோ,* **அவைகளை உங்களுடைய நன்மைக்காக வென்றே செய்தார்** *என்பதை நீங்கள் திட்டவட்டமாய் அறிந்து கொள்ளவும் முடியும்!!*

*இவ்வாறாக, சாத்தானைக் குறித்தும், அவனுடைய கிரியைகளைக் குறித்தும் வேதப்புத்தகம் நமக்குத் தெளிவான போதகத்தைத் தருவதைக் காண்கிறோம். இவைகளை நாம் அறிந்து..... நம்மை பீதியடையச் செய்வதற்காக அல்ல, சாத்தான் இன்னமும் ஏன் அழிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறான்? என்ற தேவனுடைய நோக்கத்தை நாம் தெளிவாகக் காணும்படிக்கேயாகும்!*

# 5

## சாத்தானின் வலைவீச்சுக்கள்

**ஓ**ர் வாலிபனாய் இருக்கும் உங்கள் ஜீவியத்தில் சாத்தானை எவ்விதம் எதிர்த்து நிற்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் அவ்விதம் அறியாதவர்களாய் இருந்தால் "உங்களின் அறியாமை" இவ்வுலகத்தில் உங்கள் வாழ்க்கையை அழிப்பது மட்டுமல்லாமல், உங்கள் எதிர்கால நித்திய வாழ்க்கையையும் பாதித்து விடும்! சாத்தான் உங்கள் மீது தனது தாக்குதலை தொடுப்பதற்கு, நீங்கள் 'ஒரு புருஷனாய்' வளரும் வரைக்கும் அவன் காத்திருப்பதில்லை. **ஆம், உங்களின் இந்த 'இளைய வாலிப பருவத்திலேயே'** தன் தாக்குதலை உங்கள் மீது தொடுக்க ஆரம்பித்து விடுவான்! ஆகவேதான் அவனுடைய தாக்குதலின் வழிமுறைகளை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.



"சாத்தானைக் குறித்து" தேவனுடைய வசனம் என்ன போதிக்கிறது? என்பதைவிட, துரதிருஷ்ட வசமாய் இன்று அநேக ஜனங்கள் "ஒனிடா டெலிவிஷன்" விளம்பரத்தில் தோன்றும் பிசாசின் ரூபத்தையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! இதன்படி, சாத்தான் இரண்டு கொம்புகளோடும், கூரிய நகங்களோடும், ஒருவித பச்சை நிறமுள்ள இரட்டை வாலோடும் தோன்றும் "ஓர் தீங்கற்ற வேஷதாரியாகவே" சாத்தானைக் குறித்து

எண்ணுகிறார்கள். ஆனால் வேதப்புத்தகமோ, சாத்தான் இவ்வித திடுக்கிடும் பேய்க்கோலமாய் இருப்பதாக நமக்குக் காட்டவே இல்லை! மாறாக, சாத்தான் ஓர் ஆவியாகவே இருக்கிறான்.

***மற்றவர்கள் தன்னைக் கண்டு பயந்து ஓடும்படியான தோற்றத்தில் வருவதற்கு சாத்தான் ஒன்றும் ஓர் முட்டாள் அல்ல!***

ஓர் திடுக்கிடும் பேய்க்கோலத்தில் அவன் வருவானென்றால், ஜனங்களை சோரம் போகும்படி நடத்துவதற்கு அவனால் எப்படி முடியும்?

சாத்தான் ஓர் தந்திரமிக்க கபடன்! "முதலாவது" உங்கள் நம்பிக்கைக்குரியவனாய் மாறிய பின்பே, அவன் உங்களை வஞ்சிப்பான்! சாத்தான் ஓர் கவர்ச்சியான "ஒளியின் தூதனின்" வேஷத்தில் வருகிறான் என்றே வேதாகமமும் கூறுகிறது. ஆகவேதான் "**உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு**" (வெளி. 12:9) என வேதம் அவனை அழைக்கிறது.

இதற்கு ஓர் உதாரணத்தை கவனியுங்கள். இந்த உதாரணத்திற்கு "கராத்தேயை" (KARATE) எடுத்துக்கொள்ளுங்கள். இன்று அநேக ஜனங்கள் கராத்தேயை, சுய பாதுகாப்பிற்கு வழி வகுக்கும் ஓர் "போர்க்கலை" என்றே எண்ணுகிறார்கள். ஆனால், இந்த எண்ணம் முழுமையான உண்மையல்ல. இது கிட்டத்தட்ட "யோகாவைப் போல" ஆகும். 'யோகா' ஓர் சரீர அப்பியாசம் போல தோன்றினாலும், ஜனங்கள் "சூரிய நமஸ்காரம்" வழிபாடு செய்வதற்கு போதிக்கும் செயலாகவே இருக்கிறது. இதேபோலதான் கராத்தேக்குப் பின்பாகவும் பிசாசின் சேனைகள் (பயங்கரவாதம்) அணிவகுத்து நிற்கின்றன!

***பிசாசு பிடித்த ஜனங்களிடம் 'கராத்தே பிசாசுகள்' இருந்ததைக் கண்டு அவைகளை நான் எதிர்த்து விரட்டியிருக்கிறேன்!***

ஆனால் பிசாசுகளோ, தங்களை "சுய பாதுகாப்பு" என்ற நல்ல செயலுக்கு உதவும் தீமையற்ற தூதுவர்களாகவே தங்களைக் காட்டி கொள்கிறார்கள்.

ஏதேன் தோட்டத்தில் ஏவாளுக்கு முன்பாக, சாத்தான் ஓர் வசீகரமான, கவர்ச்சிக்கும் தோற்றத்திலேயே வந்து நின்றான். இதற்கு மாறாக, ஓர் அருவருக்கும் தோற்றத்தோடு வந்திருந்தால் ஏவாள் அவனைவிட்டு தூரவிலகி ஓடியிருப்பாள்!

பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும், ஜனங்களை சாத்தான் சோதிக்கும் நிகழ்ச்சியோடு துவங்குவதை கவனியுங்கள். 1) பழைய ஏற்பாட்டின் துவக்கத்திலேயே, ஆதாமையும் ஏவாளையும் சோதித்த நிகழ்ச்சியும் (ஆதி.3), 2) புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் இயேசுவை சோதித்த நிகழ்ச்சியும் (மத்தேயு 4) விவரித்து எழுதப்பட்டிருப்பதை காண்கிறோம். இதிலிருந்து, சத்துருவின் தாக்குதல் வழிமுறைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை வேதாகமம் காட்டுகிறது.

ஆதாமும் ஏவாளும் சாத்தானை எதிர்கொண்ட மாதிரியை நாம் பின்பற்றினால் நாம் வீழ்ச்சியடைவது நிச்சயம்! ஆனால், இயேசு சாத்தானை எதிர்கொண்ட மாதிரியை நாம் பின்பற்றினால் நாம் நிச்சயமாய் அவனை ஜெயித்திட முடியும்!!

இயேசு ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பெற்ற அடுத்த கணமே (அவர் தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே) நாம் வாசிக்கும் முதல் நிகழ்ச்சி யாதெனில் "அவர் சாத்தானால் சோதிக்கப்படும்படி வனாந்தரத்திற்கு **பரிசுத்தாவி யினாலே** கொண்டுபோகப்பட்டார்" என்பதே ஆகும் (லூக்கா.4:1).

"பிசாசை சந்திக்கும்படி" பரிசுத்தாவியானவர் இயேசுவை நடத்திச் சென்றது நமக்கு மிகுந்த ஆச்சரியமாகவே இருக்கிறது! பரிசுத்தாவி யானவர், ஜனங்களை மலையின் உச்சிக்கு நடத்திச் சென்று அங்கே தேவனைக் குறித்தும் பரலோகத்தைக் குறித்தும் வெளிப்பாடுகளையும், தரிசனங்களையும் தருவார் என்றே நாம் பொதுவாய் எண்ணுகிறோம்!

***இவ்வித உன்னத இடங்களுக்கு நம்மை அவர் நடத்த முடியும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகிலும், நாம் சாத்தானால் சோதிக்கப்படும்படியான இடங்களுக்கும் தேவன் நடத்துகிறார் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்!***

நமக்கு 'தீங்கு விளையும்' ஓர் இடத்திற்கு பரிசுத்தாவியானவர் நிச்சயமாய் நம்மை நடத்திச் செல்ல மாட்டார் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்பதை நான் நம்புகிறேன். ஆகவே லூக்கா.4:1 ஆகிய இந்த ஒரு வசனத்திலிருந்து "சோதனைகள் நமக்கு தீர்க்கமான பிரயோஜனத்தைக் கொண்டு வருகிறது" என்ற உண்மையையே நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அப்படியில்லையென்றால், சாத்தானால் சோதிக்கப்படும்படி இயேசுவை பரிசுத்தாவியானவர் நடத்தியிருக்கவே மாட்டார்! இயேசுவை அவ்வாறு நடத்தியிருக்காத பட்சத்தில், நாமும் சாத்தானால் சோதிக்கப்படும்படி நடத்திட மாட்டார். தேவன் ஒருவரையும் சோதிப்பதேயில்லை.... ஆனால், நாம் சாத்தானால் சோதிக்கப்படுவதற்கோ **அனுமதி** கொடுத்துவிடுகிறார்!

இயேசுவை சாத்தான் சோதித்த காலங்களை சற்றே கவனித்துப் பாருங்கள்: **முதலாவதாக,** இயேசு இரவும் பகலும் நாற்பது நாட்கள் உபவாசித்து முடித்து பசியாயிருந்தபோது அவன் இயேசுவினிடத்தில் வந்தான்! அதாவது, நாம் சரீரத்தில் பெலவீனமாக இருக்கும்போதோ அல்லது நம் மனதைப் பாதிக்கக்கூடிய நெருக்கத்திற்கு உள்ளாகும் போதோ சாத்தான் நம்மைத் தாக்குவதற்கு முயற்சிக்கிறான்!!

**இரண்டாவதாக,** இயேசு பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு பரலோக அங்கீகரிப்பின் சத்தத்தைக் கேட்ட சமயத்தில் சாத்தான் அவரிடத்தில் வந்தான்! ஆம், தேவனிடத்திலிருந்து சொல்லி முடியாத ஆசீர்வாதத்தை பெற்ற 'அடுத்த கணமே' சாத்தான் நம்மிடத்தில் வருகிறான்!

ஆகவே சாத்தானுடைய தந்திரங்களுக்கு நாம் விழிப்பாய் இருக்கக்கடவோம்.

***நம்மை தேவன் அதிகமாய் ஆசீர்வதித்தவுடன் சாத்தான் நம் பக்கத்தில் நின்றுகொண்டு நம்மை பெருமையினால் உப்பச் செய்வதற்கு முயற்சிப்பான்!***

அல்லது, ஏதோ ஒரு தேர்வில் நாம் தோல்வியடைந்த சமயம் அல்லது வியாதிப்படும் சமயம் அல்லது சரீரத்தின் பெலன் குன்றி இருக்கும் சமயம், அவன் நம் அருகில் வந்து நின்று நம்மை **அதைரியப்படும்படி** முயற்சித்து அதன் மூலம் நம்மை பாவத்திற்குள் நடத்தி முறியடிக்க முயற்சிக்கிறான்.

ஆனால் தேவனுடைய வார்த்தை நமக்கு முன்கூட்டியே தரப்பட்டு அதன் மூலம் "சாத்தானுடைய தந்திரங்களையும் திட்டங்களையும்" நாம் இப்போது அறிந்திருக்கிறோம். சாத்தான் எவ்வாறு நம்மை நெருங்குகிறான், எந்த சமயத்தில் நெருங்குகிறான், எவ்வித கண்ணியை விரிக்கிறான், அவனால் பிறர் எவ்வாறு வஞ்சிக்கப்படுகிறார்கள், கடைசியாக... **இயேசு அவனை எவ்வாறு ஜெயித்தார்** ஆகிய அனைத்தும் தேவனுடைய வார்த்தையில் நமக்குத் தெளிவாய் காட்டப் பட்டிருக்கிறது!

நாம் மேற்கண்டபடி, சாத்தான் நம்மை நெருங்குவதற்கு முதலாவது முகாந்தரமாய் இருப்பது நம் சரீரத்தின் ஆசைகளே ஆகும். அவ்விதமே அவன் இயேசுவை அவருடைய சரீர ஆசைகளின் மூலமாய் சோதித்தான். அவரைப் பார்த்து, "நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி கட்டளையிடும்" என்ற தந்திரமான ஆலோசனையைக் கூறினான். இதேவண்ணமாகத்தான் சாத்தான் நம்மிடத்திலும் வருகிறான்.

***நம்முடைய நியாயமான சரீர ஆசைகளை, நியாயமில்லாத வழிகளின் மூலமாய் திருப்திபடுத்துவதற்கு நம்மைச் சோதிக்கிறான்.***

ஆனால் இயேசுவோ விழிப்புடன் இருந்தபடியால், "இப்படி எழுதப் பட்டிருக்கிறதே...." என சட்டென்று பதில் கூறிவிட்டார்.

இதற்கு நேர்மாறாக, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தான் பிரவேசித்தபோது, அவன் தேவனுடைய வார்த்தையை குதர்க்கம் செய்து, "தேவன் அவ்வாறு சொன்ன துண்டோ?" என்றே கொக்கரித்து பரிகசித்தான்.

இவ்வுலகில், தன் முழு இருதயமாய் சாத்தான் பகைத்திடும் ஒரே ஒரு புத்தகம் என்னவென்று தெரியுமா? அது, தேவனுடைய வார்த்தை யாகிய வேதப்புத்தகமேயாகும்! எதற்காக சாத்தான் அவ்வாறு பகைக்கிறான்? ஏனென்றால், வேதப்புத்தகமே அவன் எவ்வாறு

*சாத்தானாய் மாறினான் என்பதை வெளியரங்கப்படுத்தி, அவனுடைய எல்லா தந்திரங்களையும் பகிரங்கமாக வெளியாக்குகிறது! எல்லா வற்றிற்கும் பிரதானமாய், சாத்தான் எவ்வாறு கல்வாரி சிலுவையில் தோற்கடிக்கப்பட்டான் என்பதையும்; கிறிஸ்து இரண்டாவது தடவையாக இப்பூமிக்கு வரும்போது அவனுக்கு நிகழப்போகும் இறுதியான நியாயத்தீர்ப்பையும் வேதப்புத்தகமே எடுத்துக் கூறுகிறது.*

*ஆகவேதான்,* **சாத்தான் வேதப்புத்தகத்தை கடும் பகையாய் வெறுக்கிறான்!** *தன்னால் முடிந்தவரை ஜனங்கள் வேதப்புத்தகத்தை வாசிப்பதை தடை செய்கிறான். நீங்கள் ஒரு 'நாவல்' புத்தகத்தையோ அல்லது 'காமிக்' புத்தகத்தையோ வாசிப்பதற்கு தாராளமாய் அனுமதித்துவிடுவான். ஏனென்றால் நாவல் புத்தகங்களும், காமிக் புத்தகங்களும் அவனை ஜெயிப்பதற்கு உங்களுக்கு உதவாது என்பதை சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான். ஆனால், வேதப்புத்தகம் அவனை ஜெயித்திட உதவுமே!*

*இயேசு இந்தப் பூமிக்கு வந்தபோது, நம்மை போன்ற மனிதனாகத் தான் வந்தார். நம்மைப்போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப் பட்டார் (எபி.2:17;4:15). ஏன்? நமக்கு அவர் ஓர் மாதிரியாய் இருக்கும் படிதான்! அப்போதுதான் அவர் நம்மைப் பார்த்து "என்னைப் பின்பற்றுங்கள்! என் மாதிரியைப் பின்பற்றுங்கள்!" என அழைத்திட முடியும்.*

*ஆம், நம்மைப் பின்பற்ற அழைக்கும் இயேசுவின் மாதிரி யாது?:*

***நாம் சோதிக்கப்படும் போதெல்லாம், சாத்தானிடத்தில் தேவனுடைய வார்த்தையை மாத்திரமே கோடிட்டு காட்டுவதே அவர் நமக்குத் தந்துள்ள மாதிரி!***

*தான் சோதிக்கப்பட்ட சமயத்தில் ஏவாள் செய்ததைப் போல, இயேசு சாத்தானிடத்தில் ஓர் சம்பாஷணையை செய்து கொண்டு இருக்க வில்லை. அவ்வேளையில் தன் சரீரத்திற்கு உணவு இப்போது தேவைதானா?... உணவு அருந்துவது நல்லதா? .... எந்த வகையில் உணவு தனக்கு பிரயோஜனமாய் இருக்கும்.... என்றெல்லாம் இயேசு யோசித்துக் கொண்டிருக்கவில்லை! மாறாக, தேவன் தன்னுடைய வார்த்தையில் என்ன சொல்லி வைத்திருக்கிறார் என்பதில் மாத்திரமே இயேசு அக்கறை கொண்டிருந்தார்.*

*எனக்கு அன்பார்ந்த சிநேகிதர்களே, நீங்கள் மாத்திரம் இயேசுவின் இந்த ஒரே கோட்பாட்டை பற்றிக் கொண்டு ஜீவித்தால் எவ்வளவு நலமாய் இருக்கும்! "தேவன் தன்னுடைய வார்த்தைகளில் என்ன சொல்லியிருக்கிறார்? அதுவே என்னுடைய முடிவான பதில்!" என நீங்களும் ஜீவித்துவிட்டால், இயேசுவைப் போலவே சாத்தானை ஜெயிப்பீர்கள்! சாத்தான் தன்னிடம் மூன்று சோதனைகளோடு வந்தபோது, அந்த மூன்று சோதனைகளுக்குமே இயேசு தேவனுடைய வசனத்தைத்தான் பதிலாக வைத்தார்!!*

இங்குதான் நாம் ஏவாளுக்கும், இயேசுவுக்கும் உள்ள பெருத்த வித்தியாசத்தைக் காண்கிறோம். இங்கு இயேசு வெளிப்படுத்திய மனப்பான்மை, "என் சரீரத்திற்கு உணவைக் காட்டிலும், என் ஆத்துமாவிற்கு தேவனுடைய வார்த்தையே அதிக முக்கியம்!" என்பதாய் இருந்தது. சற்றுத் தெளிவாய் சொல்லுவோமென்றால், "நான் தேவனுடைய வார்த்தையை வாசித்து, அதை விளங்கிக் கொண்டு, கைக்கொள்வதைக் காட்டிலும் உணவின் தேவை எனக்கு அவ்வளவு முக்கியமல்ல" என்றே இயேசு கூறிவிட்டார். இந்த அர்த்தம் கொண்ட பதிலை சாத்தானுக்கு சொல்லும்படியே "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்ற பழைய ஏற்பாட்டின் வசனத்தை சாத்தானிடம் இயேசு கோடிட்டுப் பேசினார்.

அன்பார்ந்த வாலிப சிநேகிதர்களே, இதை நீங்கள் நன்கு விளங்கிக் கொண்டீர்களா? நாம் சாத்தானை ஜெயிப்பதற்கு முதலாவதாக இருக்கும் பிரதானமான கோட்பாடு, **தேவனுடைய வார்த்தையை அர்த்தமுடன் நினைவுகூருவதுதான்.** மேலும், "என் சரீரத் தேவைகளான உணவு அல்லது காமம் அல்லது இதுபோன்ற யாதொன்றையாகிலும் திருப்திபடுத்துவதைப் பார்க்கிலும் தேவனுடைய வார்த்தையே எனக்கு அதிக முக்கியம்" என்ற கோட்பாட்டிலும் நீங்கள் உறுதியாக நிற்க வேண்டும். இந்த வாலிப நாட்களின் துவக்கத்திலேயே, இந்த உறுதியான நிலையை நீங்கள் எடுக்கவில்லையென்றால் உங்கள் ஜீவியத்தில் நீங்கள் நிச்சயமாய் வஞ்சிக்கப்பட்டுப் போவீர்கள்.

இச்சமயத்தில், "ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதைக் காட்டிலும் அன்றாட உணவைப் புசிப்பதே அதிக முக்கியம்!" என சாத்தான் உங்களிடம் நிச்சயமாய் கூறுவான். இன்றும், அநேக விசுவாசிகள் சாத்தானுக்கே செவிகொடுத்து அவனை நம்புகிறார்கள்!

இவ்வாறு சாத்தான் கூறுவதைத்தான் இவர்கள் விசுவாசிக் கிறார்கள் என்பதற்குரிய நிரூபணத்தையே நம்மைச் சுற்றிலும் கண் கூடாக காண்கிறோம். ஆம், இவர்கள் ஒரு நாளைக்கு மூன்று தடவை (அல்லது அதற்கு மேலும்!) உணவைப் புசிப்பதற்கு மறப்பதோ அல்லது அதற்கென நேரமில்லாமல் போவதோ இல்லை! ஆனால், தேவனுடைய வார்த்தையை வாசிப்பதற்கோ நேரமில்லாதவர்களாய், அடிக்கடி மறந்து போகிறவர்களாயும் இருக்கிறார்கள்!!

இவ்வாறு விசுவாசிகளை வஞ்சித்து, அவர்களைப் பெலவீன மடையச் செய்யும் செயலைச் செய்தது யார்? சந்தேகத்திற்கு இடமில்லாமல் சாத்தானே இவ்வாறு செய்திருக்கிறான்! இதற்கு நேர்மாறாக இயேசுவில் நாம் காணும் மாதிரியோ நம்மைப் பரவசப் படுத்துவதாய் இருக்கிறது!

***அவர் நாற்பது நாட்கள் உபவாசித்த பின்பும்கூட, இன்னமும் தேவனிடத்திலிருந்து வார்த்தையை கவனித்துக் கேட்பதே தன் சரீரத்தேவைகளைப் பூர்த்தி செய்வதைக் காட்டிலும் அதிக முக்கியம் என உணர்ந்திருந்தார்!***

இவ்வாறு தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய வார்த்தைக்கு பிரதான இடம் தருபவர்கள் மாத்திரமே ஓர் தொடர்ச்சியான வெற்றியின் ஜீவியம் செய்வார்கள்! இதைத்தான் அப்போஸ்தலனாகிய யோவான் வாலிபர்களுக்கு எழுதும்போது, "வாலிபரே **தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினால்** நீங்கள் பலவான்களாய் இருந்து, பொல்லாங்கனை ஜெயித்திருக்கிறீர்கள்" (1யோவான்.2:14) என எழுதினார். ஆம், சாத்தானை வேறுவகையில் ஜெயிப்பது ஒருபோதும் முடியாத காரியம். ஆகவே நீங்கள் யாவரும் உங்கள் ஜீவியத்தின் ஒவ்வொரு நாளும் வேத வசனங்களை ஆர்வத்துடன் வாசித்து, தியானிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

இப்போது இயேசுவுக்கு நிகழ்ந்த **இரண்டாவது** சோதனையை கவனித்துப்பாருங்கள்:

இச்சோதனையில், தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து கீழே குதித்து தேவனுடைய பாதுகாப்பையும் அவருடைய வாக்கு தத்தத்தையும் சுதந்தரிக்கும்படி சாத்தான் இயேசுவை சோதித்தான். இந்த சோதனை எப்படியெனில், சபையின் முற்றத்தில் குழுமியிருக்கும் ஜனங்கள் மத்தியில் இயேசு பாய்ந்து வந்து, சேதம் ஏதும் இல்லாமல் பத்திரமாய் இறங்கி, சூழ்ந்திருக்கும் ஜனங்கள் "**வெற்றி ஆரவாரம்" செய்திடும் புகழை** இயேசு பெற்றுக்கொள்ளும்படியே அவரைத் தூண்டுவதாய் இருந்தது! ஆனால், உண்மை யாதெனில், இச்சோதனையின் தூண்டுதல் மூலமாய் இயேசு "தற்கொலை" செய்து கொள்ளுவதற்கே, சாத்தான் சதி ஆலோசனை கூறினான்.

***இவ்விதமே வாலிபர்களாகிய உங்களையும், ஏதாகிலும் ஒரு கவர்ச்சியான செயலைச் செய்து அதன்மூலம் நீங்கள் பிறரிடமிருந்து "வெற்றி கோஷத்தை" பெறுவதற்கே சாத்தான் அடிக்கடி தூண்டுவான்!***

அல்லது, நீங்கள் மற்றவர்களைக் காட்டிலும் மேலானவர்கள் என்பதை வெளிக்காட்டுவதற்கான செயலைச் செய்யும்படியும் தூண்டுவான். இவ்வித சோதனையின் தூண்டுதலுக்கு, "உம் பாதம் கல்லில் இடறாதபடி தூதர்கள் தங்கள் கரங்களில் ஏந்திக்கொண்டு காத்துக் கொள்வார்கள்" என்ற வேதவசனத்தைக்கூட சாத்தான் இயேசுவுக்கு கோடிட்டு காட்டினான்!!

இவ்வாறு, ஏதாகிலும் கவர்ச்சியான செயலைச் செய்து, தேவனுடைய வார்த்தையின் போதகத்திற்கு விரோதமாய் செய்யும் படியே சாத்தான் ஜனங்களை எப்போதும் தூண்டுகிறான். ஆனால்,

*உண்மையில்* **தாழ்மையே** *வலிமை நிறைந்ததாகும்! நாம் எவ்விதத்திலும் நமக்கான புகழ்ச்சியைத் தேடாமல், நம்மைத் தாழ்மையுடன் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும் ஜீவியமே சாத்தானை ஜெயிப்பதற்கு வலிமை நிறைந்ததாய் இருக்கிறது!!*

*கடைசியாக, இயேசுவுக்கு நிகழ்ந்த* **மூன்றாவது** *சோதனையை கவனித்துப் பாருங்கள்:*

*இப்போது, சாத்தான் இடைவிடாது விரும்பி இச்சிக்கும் "***தன்னை வணங்கும் ஆராதனைக்கு***" இயேசுவைத் தூண்டினான்! அவன் இயேசுவிடம், "நீர் என்னைத் தாழ விழுந்து எனக்கு ஆராதனை செய்தால், நான் உமக்கு இவ்வுலகத்தின் மகிமை யாவையும் தருவேன்" எனக் கூறினான்.*

*இவ்வுலகத்தின் மகிமையாகிய, "பணம், பிரபல்யம், பதவி, கனம், அதிகாரம்...." ஆகிய யாவும், நம் எல்லோருக்குமே சம்பவிக்கும் வலிமையான சோதனையாய் இருக்கிறது. சாத்தான் நம்மிடம், "உனக்கு இவைகளில் எது வேண்டும் சொல்? நான் அதை உனக்குத் தருகிறேன்! நீ மாத்திரம் எனக்கு கொஞ்சம் சிரம் தாழ்த்திவிட்டால், இவைகள் யாவையும் உனக்குத் தருவேன்!!" என்றே நயந்து சொல்லுவான்.*

*குறிப்பாக, வாலிபனாகிய உங்களிடம், "உன்னுடைய பரீட்சையில் நீ பாஸ் பண்ண வேண்டுமா? உன் வகுப்பில் முதல் மார்க் வாங்க வேண்டுமா? நான் உனக்கு உதவி செய்கிறேன்! நீ என்னைப் பணிந்து கொண்டால் போதும்... அதாவது, கொஞ்சம் லஞ்சம் கொடுத்து வினாத்தாளை முன்கூட்டியே வாங்கிக்கொள்!! அல்லது பேப்பர் திருத்துகிறவர்களிடத்தில் பணத்தைக் கொடுத்து அதிக மார்க்குகள் வாங்கிக்கொள்!! எப்படியாவது பரீட்சையில் கள்ளத்தனம் செய்... அவ்வளவுதான்!" என்றே தன்னிடம் தாழப்பணிந்திட நயம்காட்டி அழைக்கிறான்.*

*பரீட்சைகளில் ஏமாற்றும் நீங்கள், உண்மையில், உங்கள் மனதில் சாத்தானுக்கு சிரம் தாழ்த்தி அவனிடம், "சாத்தானே, உன்னுடைய கட்டளைகளுக்கு நான் கீழ்ப்படிகிறேன். பரீட்சை ஹாலுக்கு முக்கிய நோட்ஸ் எழுதிய துண்டு பேப்பர்களை என் பையில் மறைத்து வைத்துக் கொண்டு செல்லுகிறேன்" என்றே கூறுகிறீர்கள்!!*

*ஏமாற்றுவதற்கென இந்நாட்களில் உள்ள வாலிபர்கள் ஏராளமான திறமையான வழிகளை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏனென்றால், ஏமாற்ற விரும்பும் தனக்குரியவர்களுக்குத் தன்னுடைய 'எல்லா ஏமாற்று வேலைகளையும்' கற்றுக்கொடுத்து உதவிட சாத்தான் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறான்!*

*இவ்வுலக மகிமையை இயேசுவுக்கு சாத்தான் வழங்கியிருந்தால், அதை உங்களுக்கும் அவ்விதமே தருவான் என்பது நிச்சயம் அல்லவா?*

*வாலிபத்திலிருந்து, உங்கள் வயது கூடும்போது நீங்கள் வியக்கும் படியான* **அநேக லாபமான காரியங்களை** *அவன் உங்களுக்கு ஆலோசனையாகத் தருவான்! உதாரணமாய், "அவனை வணங்கும் ஆராதனை உபாயங்களாகிய, பொய்யான அறிக்கைக்கு கையெழுத்திடுதல், அநீதியாக பணத்தைக் கையாளுதல், குறுக்கு வழியில் செல்லும் தந்திரங்கள்..." போன்றவை மூலம், கொஞ்சம் அதிக பணத்தையும் அதிக பிரஸ்தாபத்தையும், உயர்ந்த பதவியையும் இவ்வுலகத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி தூண்டுதல் செய்வான்!*

*"உனக்கென்ன வேண்டும்? கேள்! அதை நான் உனக்குத் தருகிறேன்!" என்ற ஓலத்தையே சாத்தான் ஜனங்களிடம் ஓயாது சொல்லிக் கொண்டே இருக்கிறான். இதுபோன்ற சாத்தானுடைய சோதனையின் கேள்விகளுக்கு இயேசுவிடம் இருந்த ஒரே பதில், "அப்பாலே போ சாத்தானே! உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" (மத்தேயு.4:10) என்பதுதான்.*

*இதுபோன்ற சாத்தானின் எல்லா தந்திரங்களையும் நமக்கு எச்சரிப்பதற்கு* **தேவனுடைய வசனம்** *அருளப்பட்டிருப்பது எவ்வளவு மகத்துவமானது என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த மேன்மையான சத்தியங்களை எல்லாம் வாலிபர்களாகிய நீங்கள் இந்த இளம் வயதிலேயே கற்றுக்கொள்வதும் சொல்லிமுடியாத பாக்கியமென்பதை அறிந்திருக்கிறீர்களா?*

*இவ்வுலகத்தில் ஏதோ லாபமான ஒன்றைப் பெறுவதற்காக நீங்கள் சோதிக்கப்படும்போது, அதைப் பெறுவதற்கு உங்களின் சிறந்த பண்புகளை இழக்கவேண்டும் என்பதை உணர்ந்தால், அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?*

***இதுபோன்ற சமயங்களில்தான், இயேசு சாத்தானிடம் என்ன சொன்னார் என்பதை மறந்துவிடாதீர்கள்!***

*இந்த நல்ல இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி, அவர் சாத்தானிடம் திரும்பி என்ன சொன்னாரோ 'அதே பதிலையே' நீங்களும் சொல்லுங்கள்!*

*சாத்தான் உங்களிடத்தில் வந்து கூறும் ஒவ்வொன்றும் தீமையானது என நீங்கள் அறிந்திருந்தும், அதை நீங்கள் செய்தால், இப்போது உண்மையில் நீங்கள் என்ன செய்தீர்கள் தெரியுமா? ஆம், நீங்கள் சாத்தானுக்கு முழங்கால்படியிட்டு அவனைப் பணிந்து கொண்டீர்கள்! இவ்வாறெல்லாம் நீங்கள் செய்து கொண்டு, உங்களை இன்னமும் "ஓர் கிறிஸ்தவன்" என சொல்லிக்கொள்ள முடியுமென நீங்கள் எண்ணுகிறீர்களா? முடியாது, ஒருக்காலும் முடியாது!*

***சாத்தானுக்கு முன்பாக தன் முழங்கால்களை முடக்கிய ஒருவனும் கிறிஸ்தவன் அல்லவே அல்ல!!***

*ஆனால், கடந்த ஆண்டுகளில் இவ்வாறு சாத்தானுக்கு முன்பாக நீங்கள் முழங்கால்களை முடக்கியிருந்தால் அதற்குப் பரிகாரம் என்ன? ஆம், அவனுக்கு முழங்காலிட்ட ஒவ்வொரு சம்பவத்திற்காகவும் நீங்கள் மனந்திரும்ப வேண்டும்! மேலும், நீங்கள் ஏமாற்றியவைகளையும், தவறான முறையில் பெற்றுக் கொண்டவைகளையும் திரும்பச் செலுத்தி, இயேசு உங்களை மன்னித்து உங்கள் பாவங்களைக் கழுவும் படியாய் அவரிடம் கெஞ்சி ஜெபித்திட வேண்டும்.*

*ஓ, வாலிபனே மனந்திரும்பு!*

*இனியும், சாத்தான் உங்கள் ஜீவியத்தை ஆண்டுகொள்ளாதபடி, சற்றும் தாமதம் செய்யாமல்* **துரிதமாய்** *மனந்திரும்புங்கள்!!*

# 6

## சாத்தானின் தோல்வி

கடைசியாக, சாத்தானுடைய தோல்வியைக் குறித்த விஷயங்களை உங்களோடு இப்போது பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த பூமியில் இதுவரை நடந்த எல்லா யுத்தங்களிலும் தலையாய மாபெரும் ஓர் யுத்தம் உண்டு! ஆனால், இவ்வுலகில் உள்ள எந்த சரித்திர புத்தகங்களிலும் இந்த யுத்தம் எழுதப்படவில்லை. ஆம், இந்த யுத்தம் கல்வாரியில் நடந்தது! இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தானை இயேசு தன்னுடைய மரணத்தின் மூலமாய் ஜெயித்த, கெம்பீரம் நிறைந்ததோர் யுத்தம்!!

வேதத்தில் உள்ள மிக மிக முக்கியமான ஒரு வசனத்தை உங்கள் ஜீவியகாலம் முழுவதும் ஒருக்காலும் மறக்கவே கூடாது. அது, எபி.2:14,15-ல் காணும் வசனமேயாகும்! இந்த வசனத்தை நீங்கள் அறிந்துகொள்வதை சாத்தான் ஒருபோதும் விரும்பவே மாட்டான் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எந்த ஒரு மனிதனும் தன் சொந்த தோல்வியைப்பற்றி கேட்டிட விரும்பவே மாட்டான். இதற்கு சாத்தானும் விதிவிலக்கல்ல! இப்போது அந்த வசனத்தைக் கேளுங்கள்:



"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் (இயேசுவும்) அவர்களைப் போல மாம்சத்தையும்

*இரத்தத்தையும் உடையவராகி, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே (கல்வாரி சிலுவையில் அவர் அடைந்த மரணத்தினாலே)* **அழிக்கும்படிக்கும்,** *ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்".*

இயேசு கல்வாரி **சிலுவையில் மரித்தபோது,** அவர் சாத்தானை வல்லமையற்றவனாகும்படிச் செய்தார். எதற்காக அவர் அப்படிச் செய்தார்? ஏனென்றால், நம்மை நிரந்தரமாய் சாத்தானிடமிருந்து விடுதலையாக்கும்படிக்கும், நம் ஜீவிய காலமெல்லாம் அவன் நம்மீது வைத்திருந்த "பயத்தின் கட்டுகளை" அகற்றும்படிக்கும் அவ்வாறு செய்தார். இவ்வுலகில் உள்ள ஜனங்கள் பலதரப்பட்ட பயத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள். நோயின் பயம், தரித்திரத்தின் பயம், தோல்வியின் பயம், ஜனங்களுக்காக பயம், எதிர்காலத்திற்காக பயம்.... இன்னும் இது போன்ற ஏராளமான பயத்துடன் ஜீவிக்கிறார்கள். இந்த எல்லா பயங்களுக்கும் மேலாக, சிகரமாய் நிற்கும் ஓர் பயமே **மரண பயமாகும்!** எந்த பயமும் இந்த மரண பயத்திற்கு கீழானவைகளேயாகும்.

இந்த மரண பயம், "மரணத்திற்குப்பின் என்ன சம்பவிக்கும்?" என்ற அடுத்த பயத்திற்குள் நம்மை நடத்துகிறது. தங்கள் பாவங்களில் ஜீவிப்பவர்கள், முடிவாக நரகத்திற்கு போவார்கள் என வேதாகமம் நமக்கு மிகத் தெளிவாகப் போதிக்கிறது. நரகம் என்ற இந்த இடம், மனந்திரும்பாதவர்களுக்காக தேவன் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் இடமாகும்.

இந்த பூமியில் யாரையெல்லாம் சாத்தான் வஞ்சித்து, அவர்களைப் பாவம் செய்யும்படி செய்தானோ, அந்த ஜனங்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு தன் நித்திய காலம் முழுவதும் "அக்கினி கடலில்" பங்கடையப் போகிறான்!

நம் பாவங்களுக்காக நம்மீது விழுந்த ஆக்கினையை தன் மீது ஏற்றுக்கொண்டு, நம்மை நித்திய நரகத்திலிருந்து இரட்சிப்பதற்காகவே இயேசு இந்த பூமிக்கு வந்தார். மேலும், சாத்தான் நமக்கு ஒருபோதும் தீங்குசெய்ய முடியாதபடி, நம்மீது அவன் கொண்டிருந்த வல்லமையையும் இயேசு அழித்துப்போட்டார்!!

நான் இங்கே வலியுறுத்த விரும்பும் ஒரு சத்தியத்தை உங்கள் ஜீவிய காலமெல்லாம் மறக்காமல் நினைவுகூர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்:

> ***"சாத்தானுக்கு எதிராக தேவன் எப்போதும் உங்கள் பக்கமே நிற்கிறார்!"***

இந்த சத்தியம், ஒரு மகிமையான சத்தியமாகும்! இந்த சத்தியம் எனக்கு அதிகமான உற்சாகத்தையும், ஆறுதலையும், ஜெயத்தையும்

கொடுத்திருக்கிறபடியால், இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் இந்த சத்தியத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன்.

வேதப்புத்தகம், "தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்.... அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்" (யாக்கோபு.4:7) என்றே கெம்பீரமாய் கூறுகிறது. இயேசுவின் நாமத்திற்கு முன்பாக, சாத்தான் எப்போதுமே ஓடி ஒழிந்து போகிறான்!

சாத்தானைப் பற்றி இன்று அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் மனதில் தவறாய் கொண்டிருக்கும் காட்சி யாதெனில், "சாத்தான் அவர்களைத் துரத்துவது போலவும்.... அவனுக்குப் பயந்து தங்கள் ஜீவிய காலமெல்லாம் இவர்கள் ஓடுவதைப் போலவும்" உள்ள காட்சியே யாகும்! ஆனால் இதற்கு நேர் எதிரான காட்சியைத்தான் வேதம் நமக்குப் போதிக்கிறது.

இதைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்? இயேசுவுக்கு சாத்தான் அஞ்சி நடுங்குகிறானா? அல்லது இல்லையா? ஆம், நம் இரட்சகருக்கு முன்பாக நின்றிட சாத்தான் பயப்படுகிறான் என நாம் யாவரும் அறிந்திருக்க வேண்டும்! ஏனெனில், இயேசு இந்த உலகத்தின் ஒளி! ஒளியாகிய இவருக்கு முன்பாக இருளின் அதிபதி விலகி ஓடத்தான் வேண்டும்!!

என் அன்பான வாலிப நண்பர்களே, இப்போது நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்: "உங்களில் **யாரெல்லாம்** பரத்தின் அதிகாரத் தோடு இயேசுவின் நாமத்தை சாத்தானுக்கு எதிராகப் பயன்படுத்துகிறீர் களோ அவர்களுக்கு சாத்தான் அஞ்சி நடுங்குகிறான்!"

"சாத்தானுடைய வீழ்ச்சியை" தான் எவ்வாறு கண்டேன் என்பதை இயேசு தன் சீஷர்களுக்குச் சொன்னார்: "தேவன் அவனைத் தள்ளிய போது... சாத்தான் **மின்னலைப் போல் வீழ்ச்சியடைந்ததை**" நான் கண்டேன் என்றே இயேசு கூறினார் (லூக்கா.10:18). வனாந்தர சோதனையில் இயேசு சாத்தானைப் பார்த்து "அப்பாலே போ சாத்தானே" எனக்கூறிய சமயத்திலும், இவ்விதமே அவன் மின்னலைப் போன்ற வேகத்தில் மறைந்துபோனான். இன்று, இயேசுவின் நாமத்தைக் கொண்டு நாம் சாத்தானை எதிர்த்து நிற்கும்போது, நமக்கு முன்பாகவும் அவன் மின்னல் வேகத்தில் ஓடிவிடுவான்! ஒளிக்கு முன்பாக இருள் கட்டாயம் ஓடி மறையத்தான் வேண்டும்!

"**இயேசு**" என்னும் நாமத்திற்கு சாத்தான் மிகவும் அஞ்சுகிறான்! "இயேசுவே ஆண்டவர்!" என்றும் "ஆண்டவராகிய இயேசுவினால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்" என்றும், நாம் சத்தியத்தை நினைவு படுத்துவதை சாத்தான் வெறுக்கிறான். பிசாசு பிடித்த ஜனங்கள், "இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்!" என்றோ அல்லது "**சிலுவையில் ஆண்டவராகிய இயேசுவினால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்**" என்றோ அறிக்கை செய்ய மறுப்பதை நான் கவனித்திருக்கிறேன்!

*எந்தப் பிசாசையும் துரத்துவதற்கு, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வல்லமை இருக்கிறது! இந்த வல்லமை, உங்களிடத்தில் உள்ள எந்த பிசாசையும் மின்னல் வேகத்தில் துரத்திவிடும்!! இதை நீங்கள் ஒருபோதும் மறக்காதீர்கள்.*

*அன்பான வாலிப பிள்ளைகளே, நீங்கள் உங்கள் வாழ்வில் எந்த சமயத்திலாவது கஷ்டத்தில் இருக்கும்போது அல்லது சொல்லிமுடியாத பிரச்சனையில் இருக்கும்போது அல்லது மானிட ரீதியில் எந்த விடையும் காண முடியாதிருக்கும்போது....* **ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தை நீங்கள் கூப்பிட வேண்டுமென** *உங்கள் யாவருக்கும் அன்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு கூப்பிடும் சமயத்தில் "ஆண்டவராகிய இயேசுவே, நீர் சாத்தானுக்கு எதிராக என் சார்பில் நின்று கொண்டிருக்கிறீர்! எனக்கு இப்போது உதவி செய்யும்" எனக் கூறுங்கள். பின் அடுத்ததாக, சாத்தானிடத்தில் திரும்பி, "சாத்தானே,* **இயேசுவின் நாமத்தில்** *நான் உன்னை எதிர்த்து நிற்கிறேன்" எனக் கூறுங்கள். இப்போது "சாத்தான் உங்களை விட்டு உடனடியாக ஓடிப்போவான்" என ஆணித்தரமாய் உங்களுக்கு நான் சொல்லுகிறேன்! ஏனென்றால், இயேசு அவனை சிலுவையில் ஏற்கெனவே ஜெயித்து விட்டார்! நீங்கள் மாத்திரம் தேவனுடைய ஒளியில் நடந்து அவனை இயேசுவின் நாமத்தில் எதிர்த்து நின்றுவிட்டால், சாத்தானுக்கு உங்கள் மீது எவ்வித வல்லமையும் இருக்காது!!*

***நீங்கள் சாத்தானுடைய தோல்வியைக் குறித்து அறிந்து கொள்வதை 'அவன்' விரும்பவில்லை என்பதை இப்போது உங்களால் வெளிப்படையாய் உணர முடிகிறதல்லவா!***

*இதனிமித்தமே அவனுடைய தோல்வியைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ள முடியாதபடி, இவ்வளவு காலம் உங்களைத் தடைசெய்து வைத்திருந்தான். இதனிமித்தமே, அநேகம் பிரசங்கிகள் சாத்தானுடைய தோல்வியைப் பிரசங்கிக்காதபடி நிறுத்தி வைத்து விட்டான்!!*

*ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால், சாத்தான் முதலும் முடிவுமாக சிலுவையில் தோற்கடிக்கப்பட்டுவிட்டான் என்ற சத்தியத்தை நீங்கள் யாவரும் திட்டமும் தெளிவுமாக அறிந்துகொள்ள வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். நீங்கள் இனியும் சாத்தானுக்கு ஒருபோதும் பயப்படத் தேவையில்லை! உங்களுக்கு எவ்விதத்திலும் ஊறு விளைவித்திட அவனால் முடியாது! ஆனால், அவன் உங்களை சோதிக்க முடியும். உங்களைத் தாக்கவும் முடியும்! நீங்கள் மாத்திரம் உங்களை தாழ்த்தி, உங்களை தேவனுக்கு அர்ப்பணித்தவர்களாய் அவருடைய ஒளியில் தொடர்ச்சியாய் நடக்கும்போது, கிறிஸ்துவுக்குள் ளிருந்த தேவ கிருபை உங்களையும் எப்போதும் வெற்றி சிறக்கச் செய்யும்! ஒளியின் ஜீவியத்தில்தான் எத்தனை வல்லமையிருக்கிறது!!*

இந்த **ஒளியின் பிரகாரத்திற்குள்,** இருளின் அதிபதியான சாத்தான் ஒருபோதும் பிரவேசித்திடவே முடியாது!!

இன்று அநேகம் விசுவாசிகள் **'இருளில்'** நடக்கிறபடியால், அவர்கள் மீது சாத்தான் வலிமை கொண்டிருக்கிறான். இவர்களிடம் மண்டிக் கிடக்கும் இருள் யாதெனில்: சில இரகசிய பாவங்களும், பிறரை மன்னிக்க முடியாமல் இருப்பதும், சிலரிடம் பொறாமை கொண்டிருப்பதும் அல்லது தங்கள் ஜீவியத்தில் சுயநலம் கொண்ட இலட்சியங்களைத் தேடுவதும்.... இன்னும் இதுபோன்றவைகள் ஆகும்! இவ்வாறு இவர்கள் இருளில் நடப்பதினிமித்தமே, சாத்தான் அவர்களை ஆண்டுகொள்கிறான். இவர்கள் மாத்திரம் இவ்வித இருளின் ஜீவியத்திற்குள் பிரவேசிக்காதிருந்தால், சாத்தான் அவர்களைத் தொடக்கூட முடியாது!!

மேலும், உலகத்தில் அநேக ஜனங்கள் **மூடநம்பிக்கை** கொண்டிருப்பது போல, நாம் ஒருபோதும் கொண்டிருத்தல் கூடாது. இதுவும் இருளின் ஜீவியமேயாகும். சில ஜனங்கள் 'குறிப்பிட்ட நாட்களில்' முக்கியமான எந்த நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு அஞ்சுவார்கள். உதாரணமாய், 13-ம் தேதி **சனிக்கிழமையாக** இருந்தால் அந்த நாளில் எந்த நல்ல நிகழ்ச்சிகளையும் நடத்த மாட்டார்கள். இன்னும் சிலர், தாங்கள் செல்லும் பாதையில் "**கருப்பு பூனை**" குறுக்கே ஓடினால் அதை ஒரு கெட்ட சகுனமாக எண்ணுவார்கள்! இன்னும் சிலர், நிலவின் ஸ்தானத்தை சோதித்தறிந்து, **இராகுகாலம்** எது என தீர்மானிப்பார்கள். அந்த இராகுகால நேரத்தில் எவ்வித முக்கிய நிகழ்ச்சிகளையும் நடத்த மாட்டார்கள்!

இவ்வித மூடநம்பிக்கைக்குரிய பயங்கள் எங்கிருந்து உருவானது? சாத்தானிடமிருந்தேயாகும்! இதுபோன்ற ஒவ்வொரு பயங்களி லிருந்தும் நம்மை விடுதலையாக்கவே இயேசு இப்பூமிக்கு வந்தார்.

> ***இனியும் நாம் இந்த உலகத்தில் யாதொன்றிற்காகவும் அஞ்ச வேண்டியது ஒருக்காலும் தேவையே இல்லை. ஏனெனில், எவ்வித மூடநம்பிக்கைக்குரிய பயத்தின் எண்ணங்களும் பிசாசிடமிருந்தே தோன்றுகின்றன!***

இயேசு இப்பூமிக்கு ஒருநாளில் திரும்பவும் வருவாரென்றும், சாத்தானைப் பாதாளத்தில் கட்டிவைத்துவிட்டு, இப்பூமியை 1000-வருடங்கள் அரசாளுவார் என்றும் வேதாகமத்தின் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகம் எடுத்துக் கூறுகிறது. இவ்வித நீண்டதோர் சிறை வாசகத்திற்கு பின்பும்கூட, சாத்தான் சிறிதும் மனம் மாறாமல் அப்படியேதான் இருக்கிறான் என்பதை இவ்வுலகத்தில் ஒவ்வொரு வருக்கும் காட்டும் பொருட்டு, அவனை சிலகாலம் தேவன் விடுதலை செய்வார்! அச்சமயத்தில் அவன் புறப்பட்டுச் சென்று பூமியில் உள்ள ஜனங்களை மிகுந்த கோபத்துடன் 'கடைசியாக' ஒருமுறை

வஞ்சிப்பான். ஆம், ஆண்டவராகிய இயேசுவின் சமாதானம் பொங்கும் 1000-வருட அரசாட்சியை கண்டபின்பும்கூட, இந்த **ஆதாமின் வம்சத்தினர் மாறாமல்** அப்படியேதான் இருக்கிறார்கள் என்ற உண்மையும் அப்போது தெளிவாகும்!

பின்பு தேவன் வல்லமையாய் இறங்கிவந்து சாத்தானை நியாயந் தீர்த்து நித்திய காலத்திற்கும் அவனை அக்கினிக்கடலில் தள்ளி விடுவார்! மேலும் யாரெல்லாம் பாவத்தில் ஜீவித்தார்களோ, **யாரெல்லாம் தங்கள் முழங்கால்களை சாத்தானுக்கு முடக்கினார்களோ,** யாரெல்லாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதை ஒரு பொருட்டாய் எண்ணாமல் சாத்தானுக்கு கீழ்ப்படிந்தார்களோ, அவர்கள் யாவரும் இதே அக்கினிக் கடலில் சாத்தானோடு சேர்த்து தள்ளப்படுவார்கள்.

இதனிமித்தமே "**சாத்தானுடைய தோல்வி!**" என்ற இந்த சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம். நாம் வாழும் இக்கடைசிக் காலத்தில், இந்த செய்தி ஒவ்வொரு விசுவாசியும் கவனத்துடன் கேட்க வேண்டிய "மிக முக்கியமான சத்தியம்" ஆகும்!

ஒன்றை மறந்துவிடாதீர்கள்.... நீங்கள் பரிசுத்தத்தில் நடக்கா விட்டால், உங்களுக்கு சாத்தான் மீது எவ்வித வல்லமையும் இருக்காது! மேலும் அவனுடைய குற்றச்சாட்டுகளை கிறிஸ்துவின் இரத்தத்தால் மேற்கொள்வதற்கு நீங்கள் கற்றுக்கொள்ளாவிட்டாலும் சாத்தான் மீது உங்களுக்கு எவ்வித வல்லமையும் இருக்காது!! அதேபோல், நீங்கள் உலகத்தை சினேகித்தாலும், சாத்தான் மீது உங்களுக்கு எந்த வல்லமையும் இருக்காது.... ஏனென்றால், அவனே இந்த உலகத்தின் அதிபதியும், அதை ஆளுகை செய்கிறவனுமாயிருக்கிறான்! அதுமாத்திர மல்ல, இந்த பூமியில் நீங்கள் தேவனை நேசிப்பதைக் காட்டிலும் வேறு எதையாகிலும் அல்லது வேறு யாரையாகிலும் நீங்கள் அதிகமாய் நேசித்தால், இச்சமயத்திலும், நீங்கள் சாத்தானை மேற்கொண்டிட முடியாது! (வெளி.12:11).

ஆகவே, வாலிபர்களாகிய உங்களிடம் நான் அன்புடன் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது யாதெனில்: உங்கள் வாழ்வில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையும், அவருடைய சித்தத்தையும், உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு மனதோடும், உங்கள் முழு பெலத்தோடும் அன்புகூருங்கள்! உங்கள் மனதை சாத்தான் எந்த விதத்திலும் களங்கப்படுத்திட **அவனுக்கு அனுமதி கொடுத்து விடாதீர்கள்!!**

உங்கள் மனம் தூய்மையற்றதாய் இருந்தால், நீங்கள் சாத்தானுக்கு விரோதமாய் இயேசுவின் நாமத்தை வலிமையுடன் உபயோகித்திட ஒருக்காலும் முடியாது. இயேசுவின் நாமம் தீமையை விரட்டுவதற்காக பயன்படுத்தும் "ஓர் மந்திர நாமம்" அல்ல! அப்படி அல்லவே அல்ல! நீங்கள் முதலாவது தேவனுக்கே கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அப்போது மாத்திரமே, நீங்கள் சாத்தானை எதிர்த்து நிற்கும்போது உங்களைவிட்டு

அவன் ஓடிப்போவான். ஆனால், உங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் நீங்கள் தேவனுக்கு பூரணமாய் அர்ப்பணிக்காத பட்சத்தில், பிசாசு உங்களைக் கண்டு ஒரு துளியும் பயப்படமாட்டான்!

***"இவ்வேளையில், இப்போதே" உங்கள் வாழ்க்கையை முழுவதுமாய் கிறிஸ்துவுக்கு கொடுத்துவிடுங்கள்! இன்றிலிருந்து நீங்கள் அவருக்காக மாத்திரமே முழுமையாய் ஜீவிப்பீர்கள் என்ற தீர்மானத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்!!***

இன்றிலிருந்து சுமார் 20- வருடங்களுக்குப் பின்பு, இப்போது நீங்கள் கேட்ட தேவனுடைய வார்த்தைகளின் போதகங்களைப் பின்பற்றி நடந்ததால் பெற்ற பலனிற்காக நீங்கள் மிகுந்த நன்றியுள்ளவர்களாய் இருப்பீர்கள் என உங்களுக்கு உறுதியளித்திட என்னால் முடியும்! இதைவிட, ஒரு நாளில் நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நின்று, உங்கள் ஜீவியத்தின் கணக்கை ஆண்டவரிடம் கொடுக்கும் தருணம் வரும்போது, நீங்கள் இன்னமும் அதிக நன்றியுள்ளவர்களாய் இருப்பீர்கள்!!

உங்கள் வாழ்வின் பயணம் முடிவடையும் நாளில் "எவ்வித மனதுக்கமும் எனக்கில்லை" என நீங்கள் சொல்லும்படியாய், இந்தப் புத்தகத்தில் நீங்கள் கண்ட தூய வழியில் நடப்பதற்கு, ஆண்டவர் உங்கள் யாவருக்கும் உதவி செய்வாராக! ஆமென்.

கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன்!!